2022 ஏப்ரல் 19

# ரம்புக்கனையில் வன்முறை

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலையம்

டிசம்பர் 2022

**பங்களிப்பாளர்கள்**

| | |
|---|---|
| ஆய்வு உதவி | : சுனேத் கஜநாயக்கஃ சமுது பஸ்நாயக்க |
| நிபுணத்துவ பங்களிப்பு | : தினுஷிகா |
| தொகுப்பு | : அஜித் பெரக்கும் ஜெயசிங்க |
| மொழிபெயர்ப்பு | : Creative Content Consultants (www.contentlanka.com) |
| செயற்திட்ட ஒருங்கிணைப்பு | : பிரசங்க பெர்னாண்டோ |
| செயற்திட்ட முகாமைத்துவம | : ரஷ்மிகா விஜேசிங்க |
| கண்காணிப்பு | : பிலிப் திசாநாயக்க |
| வெளியீடு: | வாழ்வுரிமைக்கானமனித உரிமைகள் நிலையம் |
| அச்சுப்பதிப்பு | : adARTS - மஹரகம |

# உள்ளடக்கம்


**முன்னுரை** 5

**சுருக்கம்** 6

**முறைமை** 7

**பின்னணி** 8

**ஆர்ப்பாட்டம் நடாத்துவதற்கான உரிமை தொடர்பான சர்வதேச சட்டம் மற்றும் உள்நாட்டு சட்ட கட்டமைப்பு** 10

**சம்பவ ஆய்வுகள்** 12

1. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட கே.டி. சமிந்த லக்ஷன் 12

1.1 பொலிசாரின் தலையீடு மற்றும் சட்டவிரோத துப்பாக்கிச் சூடு 12

1.2 பிரேத பரிசோதனை அறிக்கை 13

குருவிடேஜ் டொன் சமிந்த லக்ஷனின் பிரேதப் பரிசோதனை முடிவுகளின் விளக்கம் 15

1.3 சம்பவத்தை விசாரிக்கும் அதிகாரிகளின் சுயாதீனத்தன்மை குறித்த சந்தேகங்கள் 15

1.4 முழுமையான விசாரணைக்காக பொலிஸால் நியமிக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழு 16

1.5 வழக்கு இல B/2424/22 16

1.6 நேரில் கண்ட சாட்சிகள் 17

2. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த கே.டி. அஷேன் சமிகர சமரநாயக்க 19

3. படுகாயமடைந்த னூ.. கமல் ஹேமஜித் குமார 20

4. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த புத்திக லக்ஷான் எதிரிசிங்க 21

5. பொலிஸாரால் தாக்கப்பட்ட 18 வயது பாடசாலை மாணவன் 22

6. பொலிஸாரால் சுடப்பட்ட M.G. சஹான் ஹசித, 14 வயது பாடசாலை மாணவர் 22

7. பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சஹிது ரங்கன 22

8. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த சு.நு.யு. சமிந்த குமார ராஜபக்ஷ 23

9. சுடப்பட்டு காயமடைந்த று.னு மிலங்க ஹம்சக விக்ரமசூரிய 23

**சர்வதேச மற்றும் உள்ளூர் சிவில் சமூகத்திடமிருந்தான பதிலளிப்பு** 24

**ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள்** 25

**பாராளுமன்ற விவாதம்** 26

**சட்ட நடவடிக்கைகள்** 27

**தற்போதைய நிலைமை** 28

**இறந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் தொடர்பாக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்** 29

**முடிவுரை** 30

**உசாத்துணைகள்** 31

# முன்னுரை

இலங்கை திருப்பம் நிறைந்த பாதையில் உள்ளதுடன் 2022 அரசியலில், குறிப்பாக மக்கள் போராட்டங்களின் அடிப்படையில் ஒரு முன்னுதாரணமான மாற்றத்தைக் குறிக்கின்றது. மக்கள் எதிர்கொண்ட பொருளாதாரச் சிக்கல்களுக்கு எதிரான அவர்களின் பரவலான போராட்டங்கள் மக்களின் உண்மையான ஆதரவுடன் நாடு முழுவதும் பரவியது. அவர்கள் நாட்டை திவாலாகு நிலைக்கு தள்ளிய அரசியலில் மாற்றம் வேண்டும் என்று கோரினர்.

சில மாதங்களாக நாட்டில் நிலவிய போராட்டங்கள் மற்றும் ஒழுங்கு சீர்குலைவுகளுக்கு முன்பாக அரசாங்கம் தோல்வியடைந்தது. போராட்டங்கள் பெருமளவில் பரவியதால் பொலிசார் அழுத்தத்திற்கு உள்ளாகி, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர போராடினர். அரசியல் அதிகாரமானது மக்கள் எழுச்சிக்கு முன்பாக வழக்கமான ஒடுக்குமுறை தந்திரோபாயங்களை உபயோகப்படுத்தியதாகத் தெரியவில்லை, ஆனால் எப்போதாவது அதிகாரத்தை பிரயோகிப்பது புலனாகியது.

ஏப்ரல் 19, 2022 அன்று ரம்புக்கணையில் நடாத்தப்பட்ட பொலிசாரின் துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகளின் முத்தொகுப்பின் ஒரு பகுதியாக இருக்கும் இந்த அறிக்கையில், ஏப்ரல் 19, 2022 அன்று ரம்புக்கணையில் நடந்த பொலிசாரின் துப்பாக்கிச் சூடு தொடர்பான சம்பவங்கள் குறித்து நாங்கள் கவனம் செலுத்துகிறோம். மற்ற இரண்டும் மே 9, 2022 அன்று ஜனாதிபதி செயலகத்திற்கு அருகிலுள்ள போராட்டத் தளத்தின் மீதான தாக்குதல் மற்றும் அதே நாளில் ஆரம்பிக்கப்பட்ட பின்தொடர்ந்தபழிவாங்கும்வன்முறை தொடர்பானஅறிக்கைகளாகும்.

போராட்டக்காரர்களின் நடவடிக்கைகள்,பொலிசாரின் நாசகார எதிர்ப்பு நடவடிக்கைகளில் உள்ள சிக்கல்கள், நீதிக்கு புறம்பான கொலைகள், சித்திரவதைகள், நீதிமுறைச் செயற்பாட்டின் சோம்பல் மற்றும் நிவர்த்தி செய்யாமை போன்ற காரணங்களால் ரம்புக்கணைசம்பவ ஆய்வு மிகவும் முக்கியமானது.

இந்த அறிக்கை, வன்முறையின் பரிமாணத்தை கோடிட்டுக் காட்டுவதுடன், இந்தச் சம்பவத்தைப் பற்றி பரவலாக கலந்துரையாடுவதுடன் அமைப்பில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பொலிஸ் வன்முறைப் பிரச்சினைக்கான தீர்வுகளைப் பரிந்துரைக்கிறது.

**பிலிப் திசாநாயக்க**
நிறைவேற்று இயக்குநர்,வாழ்வுரிமைக்கானமனித உரிமைகள் நிலையம்

# சுருக்கம்

மார்ச் 2022 முதல், இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்த சமூக அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளில் மாற்றத்தைக் கோரும் போராட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான குடிமக்கள் இணைந்து வருகின்றனர். ஏப்ரல் 19 க்கு முந்தைய வாரங்களில்,அயலவர்களை மையமாகக் கொண்ட சிறிய போராட்டங்கள்,வீதிகளை மறிப்பது, பொது இடங்களை ஆக்கிரமிப்பது மற்றும் பிரதான அரசியல் தலைவர்களை ராஜினாமா செய்யுமாறு அழைப்பு விடுக்கும் வகையில் பெரிய எண்ணிக்கையிலான மக்களை ஒன்றிணைத்தது.

இவ்வாறானதொரு சூழலில் இலங்கையின் மத்திய பிரதேசமான ரம்புக்கணையில் ஏப்ரல் 19 காலை விடிந்தது. பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு உள்ளிட்ட அனைத்து பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டதால்,எதிர்வரும் நாட்களில் விலை உயரும் என எதிர்பார்க்கப்பட்டது. ரம்புக்கணையில் எதிர்ப்பில் ஈடுபட்ட வாகன சாரதிகளால் எரிபொருள் விநியோகம் கோரி ஆரம்பமான போராட்டம் இருளில் மூழ்கியதால் பொலிசார் நீர்த்தாரை, கண்ணீர்ப்புகை மற்றும் இறுதியாக துப்பாக்கிச்சூடுகளை போராட்டக்காரர்களுக்கு எதிராக நடாத்தினர்.போலிசாரின்அராஜகத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்தனர்.

இந்த அறிக்கையில்,வாழ்வுரிமைக்கானமனித உரிமைகள்நிலையம்ரம்புக்கணைக்குத் சென்று, சுமார் நான்கு மாதங்களுக்குப் பிறகு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஏப்ரல் 19 ஆம் திகதி நடந்த சம்பவங்களின் பின்நிகழ்வுகளை ஆவணப்படுத்தியுள்ளது. இது பொலிசாரின்அராஜகத்தின் விளைவாக உடல் மற்றும் உளநல பாதிப்புக்கு ஆளான சாதாரண மக்கள் எவ்வளவு துன்பப்படுகிறார்கள் என்பதையும், நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அதிகப்படியான சக்தியைப் பயன்படுத்துவதன் விளைவுகளையும் வெளிப்படுத்துகின்றது. இதுஅரசாங்கத்தின் பொறுப்புக்கூறல், குடும்பங்களுக்கான இழப்பீட்டின் தேவைப்பாடு மற்றும் இதுபோன்ற சூழ்நிலைகளில் பொலிசாரைபயன்படுத்துதல் தொடர்பான வினா மற்றும் பொலிஸ் படைக்கு தேவையான பயிற்சி, ஒழுக்கம் மற்றும் பிரதிபலிப்பு தொடர்பானவினாக்களை எழுப்புகின்றது.

# முறைமை

வாழ்வுரிமைக்கானமனித உரிமைகள் நிலையம்ரம்புக்கணையில் ஆண்கள் மற்றும் பெண்களுடன் சுமார் 100 நேர்காணல்களை நடாத்தியது. இந்த அறிக்கையில் உள்ள கண்டறிவுகளை உருவாக்குவதற்கு இது ஊடக அறிக்கைகள், நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் பிற ஆவணங்களின் இரண்டாம் நிலைத் தரவுகளையும் நம்பியுள்ளது.

இந்த அறிக்கைக்காக தங்கள் அனுபவங்களை ஆய்வாளர்களுடன் பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்ட பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும், பாதிக்கப்பட்டு-தப்பிப் பிழைத்தவர்களுக்கும் வாழ்வுரிமைக்கான மனித உரிமைகள் நிலையம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றது. பொலிசாரின் அத்துமீறிய பலாத்காரத்தின் விளைவாக சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள சேதாரத்திற்கு நீதி கோரி அவர்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

# பின்னணி

இலங்கையின் சில பகுதிகளில் உள்ள ஏனைய சாதாரண மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வழங்குமாறு கோரி வீதிகளில் இறங்கியதைப் போன்று, ஏப்ரல் 19ஆம் திகதி ரம்புக்கணையில் நடைபெற்ற போராட்டத்தின் முக்கிய கருப்பொருள் எரிபொருள் விநியோகப் பற்றாக்குறையால் உந்தப்பட்டது. ரம்புக்கணையில், நண்பகல் முதல் மக்கள் பிரதான எரிபொருள் விநியோக நிலையத்திற்கு வெளியே ஒன்றுகூடினர். எரிபொருள் தீர்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து, ஏப்ரல் 18ஆம் திகதி அதிகாலை முதல் எரிபொருள் நிலையத்திற்கு வெளியே வரிசையில் நின்றிருந்த முச்சக்கர வண்டி சாரதிகள் உட்பட வாகன சாரதிகள் பெரிதும் சிரமப்பட்டனர். ஏப்ரல் 18 ஆம் திகதி இரவு எரிபொருள் இருப்பு வந்து சேரும் என்று அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட போதிலும், நள்ளிரவு வரை பவுசர் வரவில்லை. எரிபொருள் வருவதற்குள் எரிபொருளின் விலை இரவோடு இரவாக அதிகரித்ததுடன், எரிபொருளுக்காக வரிசையில் நின்ற மக்கள் பழைய விலைக்கே எரிபொருளை விற்க வேண்டும் என்று கோரத் தொடங்கினர். அவர்கள் எரிபொருள் நிலையத்திற்கு அருகில் அமைதியான முறையில் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்த கோரிக்கையை எரிபொருள் நிலைய நிர்வாகம் நிராகரித்ததால், போராட்டம் வலுத்ததுடன், சாலையின் நடுவே டயர்களை எரித்தும்,எரிபொருள் நிலையத்தின் முன்னால் உள்ள பிரதான வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆரப்பாட்டக்காரர்களுக்கு பிஸ்கட் மற்றும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு போராட்டம் அமைதியாக நடைபெற்றது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் மலையகபுகையிரதப் பாதையை மறித்ததால் சுமார் 16 ரயில் பயணங்கள் ரயில்வே அதிகாரிகளால் ரத்து செய்யப்பட்டன. புகையிரத பாதை மற்றும் வீதியில் இவ்வாறு தடை ஏற்பட்டுள்ளதால் ரம்புக்கணை நகரிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் வாகன போக்குவரத்து நெரிசல் அதிகரித்தது. பொலிசாரும் கலகமடக்கும் பொலிசாரும் அப்பகுதிக்கு வர ஆரம்பித்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்து வீதி மற்றும்புகையிரதப் பாதையை மறித்ததுடன், இறுதியில் தற்செயலாக அங்கே வந்த எரிபொருள் பவுசரை புகையிரதப் பாதையின் குறுக்கே நிறுத்தினர். இனந்தெரியாத குழுவொன்று எரிபொருள் நிலையத்தின் எரிபொருள் பம்பி மீதும் தீ வைக்க முயற்சித்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதுபொலிசார் முதலில் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். இதனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் பொலிசார் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். அப்போது, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. கீர்த்திரத்ன,'குறைந்தபட்ச பலத்தை' பயன்படுத்தி நிலைமையை கட்டுப்படுத்த ஆபத்தான வெடிமருந்துகளைப் பயன்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாகக் கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், எரிபொருள் நிலையத்தில் இருந்து மோட்டார் சைக்கிளை எடுக்க முற்பட்ட கே.டி.சமிந்த லக்ஷன் வயிற்றில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். மேலும் 18 வயதுக்குட்பட்ட ஒரு குழந்தை உட்பட 27 பேர் காயமடைந்தனர். காயமடைந்த 27 பேரில் பத்து பேர் பொலிஸ் அதிகாரிகளாவர். இனந்தெரியாத நபர்கள் அருகாமையில் நின்றிருந்த முச்சக்கரவண்டிக்கு தீ வைத்ததையடுத்து, புகையிரத பாதையின் குறுக்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் பவுசருக்கு தீ வைக்க முயற்சித்ததன் பின்னரே, துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும்,பொலிசார் தடியடி பிரயோகத்தால்நிலமையை கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை எனவும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். மேலே சுடுவதன் மூலமாக நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது என்ற அடிப்படையிலேயே முழங்காலுக்குக் கீழே சுட வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது என்று ஆபத்தான வெடிமருந்துகளைப் பயன்படுத்தியதை அதிகாரிகள் மேலும் நியாயப்படுத்தினர்.

ஒரு போராட்டத்தின் சூழலில் பொது ஒழுங்கை உறுதி செய்வதற்கான கடைசி முயற்சியேஆபத்தான வெடிமருந்துகளைப் பயன்படுத்துவது ஆகும். இந்தச் சந்தர்ப்பத்தில், இனந்தெரியாத நபர்கள் எரிபொருள் நிலையத்திற்கு தீவைக்க முற்பட்டதுடன், அதிகமாக தீப்பற்றக்கூடிய எரிபொருளை ஏற்றிச் சென்ற பவுசருக்கும் தீ வைக்க முற்பட்டதாலும் பாரிய வெடிப்பு அபாயம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், பொலிஸ் அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள், அவர்கள் தடியடி மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீச முயற்சித்ததைக் காட்டுவதுடன், பின்னர் வீதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் சாதாரண மக்கள் காயமடையும் மற்றும் இறக்கும் அபாயத்தில் இருந்தமை தெளிவாக உள்ள நிலையில் உடனடியாக வெடிமருந்துகளைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இந்த அறிக்கைக்காக நடாத்தப்பட்ட நேர்காணல்களில் பொலிஸ் அதிகாரிகளே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கற்களை வீசுவதை காண முடிந்தமையை வெளிப்படுத்தியது.

காணொளி ஆதாரங்கள் மூலம் சரிபார்க்கப்பட்ட நிலைமை, மக்கள் தெருவில் ஓடுவதைக் காட்டுவதுடன் தப்பிப்பிழைத்தவர்களின் சான்றுகள் பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்பிக்க ரயில் தண்டவாளத்தின் குறுக்கே ஓடியதைக் காட்டுகின்றது. இருப்பினும் சிலர் சுடப்பட்டனர். பொலிஸ்துறையின் பதிலளிப்பு, சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும், நிலைமையை கட்டுக்குள் கொண்டுவருவதும் மட்டுமல்லாது,ஆர்ப்பாட்டக்காரர்களைப் பழிவாங்குவது அல்லது தண்டிப்பது தான் என்பது தப்பிப்பிழைத்தவர்களில் சிலரின் சாட்சியங்களில் இருந்து தெரிகிறது. சுடப்பட்டவர்கள் கஷ்டப்பட வேண்டும் என்று கூறியதுடன், சில சமயங்களில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முயன்றவர்களை பொலிஸ் அதிகாரிகள் தடுத்துள்ளனர். பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நோயாளிகளைக் கூட பொலிஸ் அதிகாரிகள் தாக்கியதாக அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. இதனை பல பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் உறுதிப்படுத்தினர்.

இந்தச் சூழலில், சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் கீழும், இலங்கையின் அரசியலமைப்பின் மூலம் பாதுகாக்கப்பட்ட கருத்துச் சுதந்திரம்,ஒன்றுகூடலுக்கும் ஒருங்குசேர்வதற்குமானஉரிமையின் அடிப்படையிலும் அதிகாரிகளின் பதிலளிப்பு அனுமதிக்கப்பட்ட பலத்தைப் பயன்படுத்துவதிலும் பார்க்க அதிகமாக உள்ளதென்பது தெளிவாகிறது. பின்வரும் சாட்சியங்கள் வெளிப்படுத்துவது போல, சம்பவத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சமிந்த லக்ஷனின் குடும்பம், நேரடியாக மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதுடன்,வருமானமீட்டும் நபரை இழந்துள்ளதுடன், சம்பவம் நடந்து ஏழு மாதங்களாகியும் இழப்பீடு வழங்கப்படாமல் உள்ளது.

# ஆர்ப்பாட்டம் நடாத்துவதற்கான உரிமை தொடர்பான சர்வதேச சட்டம் மற்றும் உள்நாட்டு சட்ட கட்டமைப்பு

இலங்கை அங்கீகரித்துள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனம் (ICCPR), கருத்து சுதந்திரம்,அமைதியான ஒன்றுகூடல் மற்றும்ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம் ஆகியவற்றின் உரிமையைப் பாதுகாப்பதற்கான தெளிவான கடப்பாடுகளை அரசுக்கு வழங்குகின்றது. இந்த உரிமைகள் இலங்கையின் அரசியலமைப்பில் 14(1) (அ), (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன, மேலும் இந்த உரிமைகள் சட்டத்தால் பரிந்துரைக்கப்படக்கூடிய ஒரே சந்தர்ப்பங்களாவன "இன மற்றும் மத ஒற்றுமையின் நலனுக்காக் அல்லது பாராளுமன்ற சிறப்புரிமை தொடர்பாக, நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது குற்றத்திற்கு தூண்டுதல்"ஆகியனவாகும். ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம் தேசிய பொருளாதாரத்தின் நலன்களுக்காகவும் பரிந்துரைக்கப்படலாம், அதே நேரத்தில் ஒன்றுகூடும் சுதந்திரம் இன மற்றும் மத நல்லிணக்கத்தின் நலன்களுக்காக மட்டுமே பரிந்துரைக்கப்படும்.

படையினர் மற்றும் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவது தொடர்பான ஐ.நா. அடிப்படைக் கோட்பாடுகள் (BPUFF) மனித உரிமைகள் சட்டத் தரங்களுக்கு ஏற்ப தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்கும், சக்தியைப் பயன்படுத்துவதைக் குறைப்பதற்கும், சட்ட அமுலாக்கத்திற்கு குறைவான உயிராபத்தான ஆயுதங்களை அணுக வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிறது. இதனால்சட்டம்ஒழுங்கைப்பேணுவதற்குதேவையானகுறைந்தபட்சசக்தியைப்பயன்படுத்துவதற்கும்,சக்தியைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைகளையும் பயன்படுத்த வேண்டியதல்லாத சூழ்நிலைகளையும் வேறுபடுத்திப் பார்ப்பதற்கும் அவர்களுக்கு முடியும்.சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்டால் மட்டுமே (அதாவது கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல் மற்றும் ஒன்றுசேர்வதற்கான உரிமையை மதித்து பாதுகாப்பது) அவசியமான மற்றும் சட்டப்பூர்வமான நோக்கத்திற்காக மட்டுமே எதிர்ப்பாளர்களுக்கு எதிராக குறைவான உயிராபத்தான ஆயுதங்கள் உட்பட ஆயுதங்களை பயன்படுத்தப்பட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில், இனந்தெரியாத குழுவினரால் எரிபொருள் பவுசர் அல்லது எரிபொருள் நிலையத்திற்கு தீ வைப்பதால் ஏற்படும் தீங்கிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பது நியாயமான நோக்கமாயினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் வீதி அல்லது புகையிரத தண்டவாளங்களில் இருந்து அவர்கள் சேகரித்த கற்கள் மட்டுமே என்பதை கருத்தில் கொள்ளும்போது, தப்பியோடிய எதிர்ப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களை கூட சுடுவதற்கு ஆபத்தான ஆயுதங்களைப் பயன்படுத்துவது அவசியமற்றது அல்லது பாராபட்சமானதாகும். போராட்டக்காரர்களைக் கொல்ல அவர்களைச் சுடுமாறு பொலிஸ் மேற்பார்வையாளர்கள் வழங்கிய அறிவுறுத்தல்கள் அவசியமானவையோ, சட்டபூர்வமானவையோ அல்லஎன்பதுடன் தவிர்க்கப்பட வேண்டிய தீங்குக்கு விகிதாசாரமானவையல்ல. இந்த நிகழ்வில் பயன்படுத்தப்படும் உயிராபத்தான ஆயுதங்களும் குறைந்தபட்ச தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் பயன்படுத்தப்படவில்லை. உண்மையில், பாதிக்கப்பட்டவர்களின் காயங்கள், துப்பாக்கிச் சூடு முழங்காலுக்கு மேல் இருந்ததைக் காட்டுவதுடன், இதனால் எதிர்ப்பாளர்களுக்கு அதிகபட்ச உடல் ரீதியான தீங்கு ஏற்பட்டதுடன், ஒரு மரணமும் ஏற்பட்டது. மேலே சுடுவதும் ஆபத்தானதுடன்இலக்கு வைக்கப்படாததால் மரணத்தை ஏற்படுத்தலாம்,மற்றும் அதன் வழியில் நிற்கும் எவருக்கும் தீங்கு விளைவிக்கும்.

பல திசைகளில் ஓடிக்கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தின் மீது பொலிஸ் அதிகாரிகளின் துப்பாக்கிச் சூடுகளும் எழுந்தமானமாகத் தோன்றுவதையும் நாம் இந்த நிகழ்வில் காண்கிறோம். கீழே உள்ள சம்பவ ஆய்வுகளில், பாதிக்கப்பட்டவர்கள் வீதியில் உள்ள எரிபொருள் நிலையத்தை நெருங்கும் போது,புகையிரதப் பாதையைக் கடக்கும்போது, மற்றும் ஓர் பிரதான வீதியில் தப்பிச் செல்லும் போது சுடப்பட்டனர். கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தின் போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதென்பது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரிகளின் பார்வைக்கு இடையூறாக இருப்பதுடன் ஒரு பயங்கரமான ஆயுதத்தைப் பயன்படுத்துவதில் துல்லியமாக இருப்பதை கடினமாக்கும். முழங்காலுக்கு மேல் பாதிக்கப்பட்டவர்களை சுட்டுக் கொன்றமையானது அதிகாரிகளுக்கு இதுபோன்ற ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவர்களுக்கு சிறந்த பயிற்சியின் அவசியத்தை சுட்டிக்காட்டுவது மட்டுமில்லாமல்,குறிப்பாக துல்லியமாக இலக்கு வைப்பதிலுள்ள சவால்களைக் கருத்தில் கொண்டுஆபத்தான ஆயுதங்களைப் பயன்படுத்துவதே கடைசி முயற்சி என்பதை புரிந்து கொள்வதற்கானஅவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. இந்த நிகழ்வில் ஒருபோதும் உயிராபத்தான ஆயுதங்கள்

பயன்படுத்தியிருக்கக்கூடாது என்பது தெளிவாகிறது, மேலும் கே.டி. சமிந்த லக்ஷனின் மரணம் பொலிஸாரின் அதீத, தேவையற்ற மற்றும் பாராபட்சமான பலத்தைப் பிரயோகித்ததன் காரணமாக ஏற்பட்டதாகும்.

கண்ணீர் புகைப் பிரயோகம் தொடர்பாக,இது வருடம் முழுவதும் எதிர்ப்புக்களுக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அதிகாரிகளால் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. உண்மையில், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் அரிதாகவே பயன்படுத்தப்பட வேண்டும், மேலும் கூட்டம் வன்முறையாக இருந்தால் மட்டுமே, குறிப்பிட்ட வன்முறையாளர்களை மட்டும் குறிவைத்து அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே பயன்படுத்தப்பட வேண்டும். இருப்பினும் கூட, குறைவான தீங்கு விளைவிக்கும் முறைகளை முயற்சித்த பின்னரே அதைப் பயன்படுத்த வேண்டும். அதனைமக்கள் அப்பகுதியை விட்டு வெளியேற முடியாதபோது ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. இந்த நிகழ்வில்,பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்தியதுடன், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் காரணமாக புலனாகுநிலை குறைவடைந்ததுடன்,போராட்டத்தின் பொதுவான திசையில் உயிராபத்தான வெடிமருந்துகளையும் சுடத் தொடங்கினர். போராட்டத்தின் மையத்திலிருந்து ஓடிக்கொண்டிருந்தவர்களும் சுடப்பட்டதால், இது ஏற்கனவே மக்களைப் பாதிப்படையச் செய்திருக்கும். காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு வந்த அல்லது தனியார் வாகனங்களை அமர்த்திய நபர்களின் சாட்சியங்களில் இருந்து தெளிவாகத் தெரிந்தபடி மருத்துவ உதவியும் உடனடியாக கிடைக்கவில்லை.

காயமடைந்த எதிர்ப்பாளர்களை பொலிசாரே தாக்கியதுடன் மருத்துவ உதவிகளை தாமதப்படுத்தியது அல்லது ஆதரிக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்களின் குற்றச்சாட்டுகள் இன்னும் அதிகமாக உள்ளன. வன்முறையைத் தணிப்பதும், ஆர்ப்பாட்டக்காரர்கள் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான உரிமையைத் தொடர்ந்து பயன்படுத்த அனுமதிப்பதுமே அதிகாரிகளின் முதன்மைக் கடமையாகும். இந்தச் சந்தர்ப்பத்தில், பொலிஸாரின் உந்துதல், பொது ஒழுங்கைப் பாதுகாப்பதைத் தாண்டி, போராட்டத்தில் கலந்துகொண்டதாகக் கருதப்பட்டவர்களை பழிவாங்கும் வகையில் செயற்பட்டதாகத் தெரிகிறது.

இந்த சம்பவங்கள் சம்பந்தப்பட்டவர்களை விசாரித்து வழக்குத் தொடர்வதற்கான நீதித்துறை செயன்முறைகளுடன்கவனமாக ஆராயப்பட வேண்டியஅவசியத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு மற்றும் நட்ட ஈடுவழங்கப்படுவதை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். சம்பவ ஆய்வுகள் காட்டுவது போல், பல பாதிக்கப்பட்டவர்கள் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் சுகாதாரப் பாதுகாப்புக்காக பெரும் தொகையைச் செலவழிக்க வேண்டியிருந்ததுடன் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தொடர்ந்து மருத்துவ சேவையைப் பெறுவதில் கூட சிரமங்களை அனுபவித்துள்ளனர். சமிந்த லக்ஷனின் குடும்பத்திற்கு வருமானமீட்டுபவரின் இழப்பு மதிப்பிட முடியாத ஒன்றாகும். இந்த இழப்புக்கான இழப்பீடுகள் அவர்களின் உரிமையாகும் என்பது அரசு முன்னுரிமை அளிக்க வேண்டிய விடயமொன்றாகும்.

மேலதிகமாக, பொலிஸ் படைக்குள் மேம்பட்ட பயிற்சி மற்றும் பொறுப்புக்கூறலின் தீவிர தேவையும் இதேபோல் தெளிவாக உள்ளது. பல ஆண்டுகளாகப் படையில் பயிற்சி மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல் இருந்தபோதிலும், இந்த வகையான சம்பவம், முன்மாதிரியான, மனித உரிமைகளுக்கு நட்புறவான அதிகாரிகளை அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பொதுமக்களின் எதிர்ப்புக்கு இவ்வாறான பிரதிபலிப்பு மீண்டும் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை இலங்கை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும்.

# சம்பவ ஆய்வுகள்

## 1. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட கே.டி. சமிந்த லக்ஷன்

42 வயதான கரந்தகஸ்தன்ன, நாரம்பெத்த, ஹிரிவடுன்ன,ரம்புக்கனை ஆகிய இடங்களில் வசித்து வந்த கே.டி.சமிந்த லக்ஷன், வாழ்வாதாரத்திற்காக பல்வேறு சிறுதொழில்களை செய்து வந்தார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். இவரது மனைவி சமன் பிரியங்கனி மற்றும் அவர்களது இரண்டு பிள்ளைகள் 20 வயதுடைய மகளும் 15 வயதுடைய ஒரு மகனும் ஆவார்கள்.

சமிந்த லக்ஷனுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் நிலுவையில் உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், அவற்றில் ஒன்று 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கையெறி குண்டுகளை வெடிக்கச் செய்து நபர் ஒருவரைக் கொன்றமை தொடர்பில் உயிரிழந்தவருக்கு எதிராக கேகாலை மேல் நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்காகும். 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வேன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு ஒருவர் காயமடைந்தமை தொடர்பில் மற்றுமொரு வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவருக்கு எதிரான அவதூறுகள், இலங்கையில் பொலிஸாரால் நீதிக்கு அப்பாற்பட்ட கொலைகளில் பாதிக்கப்பட்டவர்களை குற்றவாளிகள் அல்லது கிரிமினல்கள் என ஊடகங்களில் சித்தரிக்கப்பட்ட மற்ற சூழ்நிலைகளைப் போலவே உள்ளதுடன்,அவர்களை பாதித்தநீதிமன்றத்திற்கு அப்பாற்பட்ட மரணதண்டனை அல்லது வன்முறைக்கு சிறிதும் பொருந்தாததாகும்.

### 1.1 பொலிசாரின் தலையீடு மற்றும் சட்டவிரோத துப்பாக்கிச் சூடு

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி ரம்புக்கனையில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் ஆராய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் இடைக்கால அறிக்கையின்படி,2022ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி அதிகாலையில் ரம்புக்கனை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் சுமார் 200 பேர் தமது வாகனங்களுடன் வரிசையில் நின்றதுடன், நகரத்திலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு அருகில்எரிபொருள் பவுசர் வரவிருக்கிறது என்பதை அவர்கள் முன்கூட்டியே அறிந்திருந்தனர். பவுசர் புகையிரத நிலையத்திற்கு வருகை தந்த போது, அதிக விலைக்கு வழங்காமல், முன்னய விலையில் எரிபொருளை விடுவிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுதான் பதட்ட நிலைக்கு காரணமாகும்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் அச்சுறுத்தல் இரு பவுசர்களுக்கும், எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் தீ வைப்பதாக இருப்பதை பொலிஸார் அவதானித்ததோடு, ஏற்கனவே புகையிரத பாதையில் தடை செய்யப்பட்டிருந்த புகையிரதத்தை சேதப்படுத்தப் போவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அச்சுறுத்தியதாக பொலிஸார் வாதிட்டனர். கண்ணீர் புகை குண்டுகளை பிரயோகித்தும் பொலிஸாரின் வேண்டுகோளுக்கேற்ப கூட்டம் கலையாமையால், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. கீர்த்திரத்ன போராட்டக்காரர்களை முழங்காலுக்கு கீழே சுடுமாறு உத்தரவிட்டார். இருப்பினும், கீழே உள்ள அதிகாரிகளின் சாட்சியத்தின்படி, உத்தரவுப்படி துப்பாக்கிச் சூடு நடத்தப்படவில்லை. அவர்கள் தரையில் சுட முடிவு செய்தனர். T56 துப்பாக்கிகளை வைத்திருந்து தரையைக் குறிவைத்து சுட்ட பொலிஸ் அதிகாரிகளின் பெயர்கள் பின்வருமாறு.

1. பொலீஸ் கான்ஸ்டபிள் (69336) H.S.P. ஜெயக்கொடி
2. பொலிஸ் கான்ஸ்டபிள் (29116) ஜீவன் லக்மால் கபுகொடுவ
3. பொலிஸ் கான்ஸ்டபிள் (90427) ஜனக குமார

திணைக்கள ரீதியான உத்தரவுகளில் கூறப்பட்டுள்ளபடி, முழங்காலுக்கு கீழே சுட உத்தரவிட்ட பிறகு, அதிகாரி தன்னிச்சையாக தன் விருப்பப்படி சுட முடிவு செய்தால், அவர் பொலிஸ்திணைக்களத்தின் உத்தரவை மீறுகிறார்.

எவ்வாறாயினும், பின்வரும் காரணங்களுக்காக இந்த பொலிஸ் அதிகாரிகளின் சாட்சியங்களை நம்ப முடியாது.

1. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன் மருத்துவ அறிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களை துப்பாக்கி ரவைகள் முழங்காலுக்குக் கீழே தாக்கவில்லை என்று சுட்டிக்காட்டியமை.

2. மேலதிகமாக, ஆணைக்குழுவிற்கு உதவிய ஆயுதவியல் நிபுணர் மற்றும் தடயவியல் நிபுணர் மற்றும் இந்த விசாரணை தொடர்பான அரசாங்க பகுப்பாய்வாளரின் அறிக்கை பொலிஸாரின் வாதம் பொய்யானது என்று தெளிவாகக் கூறியுள்ளது.

கூட்டத்தை கலைக்க பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதையும், கூட்டம் படிப்படியாக கலைந்து வருவதையும் நிபுணர் குழு அவதானித்தது. எனினும், கண்ணீர் புகைக் குண்டு வீச்சு முற்றாக தீரும் வரை பொலிஸார் நடவடிக்கையைத் தொடரவில்லை. கண்ணீர்ப்புகைச் செயற்பாடு நிறுத்தப்பட்டவுடன், குழு மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டது. திணைக்கள உத்தரவுகள் மற்றும் பொலிஸ் சுற்றறிக்கைகளில் வகுக்கப்பட்ட முறையான நடைமுறையைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, குறிப்பிடப்படாத அதிக எண்ணிக்கையிலான மக்களை முழங்காலுக்குக் கீழே சுட உத்தரவிட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கீர்த்திரத்ன முடிவு செய்தார்.

இரண்டு எரிபொருள் பவுசர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுமெனவும், மக்களுக்கும் உடமைகளுக்கும் பாரிய சேதம் ஏற்படும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்திரத்னவுக்கு நியாயமான அச்சம் இருந்ததாகவும், அதனால் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டதாகவும் பொலிஸார் வாதிட்டனர். இந்த விவகாரத்தில் பொலிஸாரின் வாதங்கள் ஆதாரமற்றவை என்று நிபுணர்குழு உறுதியானதும் இறுதியானதுமான முடிவுக்கு வந்தது. மடவளை வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பவுசரில் இருந்து விலகிச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்தபோது இந்த அனுமானம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டதாக நிபுணர்குழு குறிப்பிட்டுள்ளது.

### 1.2 பிரேத பரிசோதனை அறிக்கை

கேகாலை மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் N.A.S.P விஜேரத்ன குருவிட்டகே டொன் சமிந்த லக்ஷானின் காயங்களின் தன்மை குறித்து கீழே குறிப்பிட்டுள்ளார். மேலும் சமிந்த லக்ஷனின் மரணத்திற்கு காரணமான பின்வரும் விடயங்களை மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

1. இரத்தப்போக்கினால் ஏற்படும் அதிர்ச்சி
2. அடிவயிறு மற்றும் இடுப்புப் பகுதியின் இரத்த நாளங்கள், தசைகள் மற்றும் தசைநார்கள் ஆகியவற்றில் காயங்கள்
3. துப்பாக்கியிலிருந்து வெளியானஒரு தோட்டா

**Injuries**

1) Fresh perforated laceration, 6.5cmx3cm in greatest dimension, spindle shape, obliquely situated (about 40 degree angle to the horizontal plane) over the front of the abdomen across the midline. The upper end of the wound is situated 7cm below and 2cm to the right from the umbilicus. There was no burning, blackening or tattooing around the skin of the injury. The distance from the upper end of the wound to the right heel was 92cm. There was shelving of the upper end and undercutting at the lower end. The wound extended as an oblique tract across the soft tissues of the abdominal wall. There was a full thickness elongated laceration of the rectus muscle, 9cmx5cm in greatest dimension, obliquely placed. The peritoneal cavity contained about 300ml of liquid blood. Transection of the sigmoid colon with laceration of the mesentery was observed about 12cm proximal to the recto-sigmoid junction. There was laceration of inner hip muscles and internal iliac blood vessels on the left side. A compound, comminuted depressed fracture was observed on the left iliac bone. Four metallic foreign bodies were recovered from the base of the above fracture.
2) Fresh, circular shape perforated laceration, 1.5cm diameter, situated over the right hip region. It is situated 15cm below and 12cm to the right from the umbilicus. The distance from the center of the wound to the right heel was 89cm. It was surrounded by an abraded margin. The wound then extended in a form of a tract obliquely downwards and medially through the sub-cutaneous tissues in to the superficial muscles of the right hip.
3) Fresh oval shape perforated laceration, 1cmx0.6cm, situated over the right upper thigh. It is situated 17cm below and 11cm to the right from the umbilicus. The distance from the center of the wound to the right heel was 83cm. It extended obliquely into the sub-cutaneous tissue level.

**(Injuries cont. in Annexure 1)**

Dr. N.A.S.P. WIJERATHNA
MBBS, DLM, MD (Forensic Medicine)
SLMC Reg. No. 17046
Consultant JMO
DGH Kegalle.

20. මරණයට හේතුව සහ අනෙකුත් අදාල මත
மரணத்தின் காரணமும் மற்றைய பிரயோசனமான கருத்துக்களும்
Cause of death and other relevant opinion

**1a – Haemorrhagic Shock**
**1b –Injuries to blood vessels, muscles, and bowels of the abdomen and pelvis**
**1c –Discharged bullet of a Firearm**

**Other opinions:**

1. Injury no 1 is consistent with an entry wound caused by a bullet from a rif entered the body at an angle (Oblique discharge).
2. Direction taken by the bullet is from right to left and downwards when the
3. Range of fire is distant. However presence of clothing and intermediate ob estimation of range of fire.
4. Category of hurt of injury no 1 is fatal in the ordinary cause of nature.
5. Injuries no 2-8 are Non-grievous in nature.
6. Injuries no 2-8 could be caused by fragmentation of the projectiles from the ejected from intermediate objects.

පශ්චාත් මරණ පරීක්ෂණ ලේඛනයේ අනුක්‍රමික අංකය
பிரேத பரிசோதனை பதிவு புத்தகத்தின் இலக்கம்
Post-Mortem register Serial Number } KG 283/04/2022


දිනය/திகதி/Date

වෛද්‍යවරයාගේ අත්සන, සුදුසුකම් සහ තනතුර
Signature, Qualifications and Designation of Medical Officer.

මරණ පරීක්ෂකගේ/මහේස්ත්‍රාත්ගේ තීරණය

### குருவிடேஜ் டொன் சமிந்த லக்ஷனின் பிரேதப் பரிசோதனை முடிவுகளின் விளக்கம்

சூழ்நிலை ஆதாரங்கள், காட்சி அமைப்புகளின் ஊகித்தறியும் பகுப்பாய்வு மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையின் கண்டறிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில், இறந்தவர் எரிபொருள் நிலையத்தின் மறுபுறம், எரிபொருள் நிலையத்தையும் குறுக்கு வீதியையும் பிரிக்கும் கம்பி வேலிக்குப் பின்னால் கிடந்தார். இறந்தவர் பொலிஸாருக்கு அச்சுறுத்தலாக இருக்கவில்லை. இறந்தவர் நேரடியாக எரிபொருள் நிலையம்ஃபிரதான வீதியின் ஓரத்தில் இருந்து அதாவது கம்பி வலை வேலியின் மறுபுறத்தில் இருந்து நேரடியாக சுடப்பட்டதையும் அவதானிக்க முடிகிறது. எனவே மேற்படி காரணங்களின் அடிப்படையில் உயிரிழந்த நபரை பொலிஸ் உத்தியோகத்தர் சுட்டுக் கொன்றமைக்கு நியாயமான காரணங்கள் இல்லை என நிபுணர்குழு வலியுறுத்தியுள்ளது.




(குற்றம் நடந்த இடத்தின் கூகுள் வரைபடம்)

இறந்தவரை சுட்டுக் கொன்றதற்கான சட்டப்பூர்வமான தன்மையை பொலிஸாரால் உறுதிப்படுத்த முடியாது என்று குழு அவதானித்துள்ளது.

கூட்டத்தைக் கலைக்கும் நடவடிக்கையில் கடைசி முயற்சியாக துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதில் பொலிஸ் அதிகாரிகள் சரியான முறையைப் பின்பற்றவில்லை என்பதுடன்,குருவிடேஜ் டான் சமிந்த லக்ஷனின் மரணம், குறிப்பாக இறந்தவர் பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் அச்சுறுத்தலைவழங்காத போது, பொலிஸார் அதிகாரத்தை மீறிச் செயற்பட்டதன் விளைவேயாகும். மேலும் இந்த மரணத்தை பொலிஸ் சட்டப்பூர்வமாக நியாயப்படுத்த முடியாது என்றும் நிபுணர்குழு தெரிவித்துள்ளது.

போராட்ட இடத்திற்கு அருகில் மக்கள் மீது துப்பாக்கிச் சூட்டுக் காயங்களின் எண்ணிக்கை அதிகமாகவும், குறிப்பாக அவர்களின் முதுகில் இருந்தமைபொலிஸ் அதிகாரிகள் அதிக பலத்தை பயன்படுத்தியதைக் குறிக்கிறது.

## 1.3 சம்பவத்தை விசாரிக்கும் அதிகாரிகளின் சுயாதீனத்தன்மை குறித்த சந்தேகங்கள்

ரம்புக்கணை சம்பவத்தை பொலிஸார் கையாண்ட விதம் தொடர்பில் ஆராய்வதற்காக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) ஜகத் அல்விஸ் தலைமையில் சுயாதீன விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. குழுவின் மற்ற உறுப்பினர்கள்,

சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.டி. கொடிகார

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எஸ்.பி. சூரியப்பெருமா

பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஈ.எஸ். ஜெயசிங்க.

ரம்புக்கணை துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள சுயாதீன விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் அரச பாதுகாப்பில் உள்ளவர்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வாறான ஒரு குழு சுயாதீன சபையல்ல என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

சட்டத்தின் ஆட்சி மற்றும் அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பு தொடர்பில் சுதந்திரம் மற்றும் பக்கச்சார்பற்ற தன்மையை உறுதி செய்வதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி,மற்றும் சிவில் சமூக உறுப்பினர் போன்ற அரச பாதுகாப்புடன் தொடர்பற்ற நபர்களை நியமிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்புப் படைகளுக்கு அறிவித்தது.

ரம்புக்கணை சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவிசாவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த தலைமையில் 20 அதிகாரிகள் அடங்கிய விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### 1.4 முழுமையான விசாரணைக்காகபொலிஸால் நியமிக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழு

ரம்புக்கணை சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவிசாவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த தலைமையில் 20 அதிகாரிகள் அடங்கிய விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் அனுமதிக்கு உட்பட்டு, சப்ரகமுவ மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரினால் இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மூன்று உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட 20 அதிகாரிகளைக் கொண்ட இந்த விசேட குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

### 1.5 வழக்குஇல B/2424/22

19.04.2022 ஆம் திகதியன்றுரம்புக்கணை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற போராட்டத்தின் போது ஏற்பட்ட சமிந்த லக்ஷ னின் மரணம், பலருக்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பாக பொலிஸார் 20.01.2020 அன்று இரண்டு டீஅறிக்கைகள் ஊடாக கேகாலை நீதவான் திருமதி வாசனா நவரத்னவிடம் உண்மைகளை அறிவித்துள்ளனர்.

ஒரு B அறிக்கையில், பதினெட்டு வயதுடைய பாடசாலை மாணவரான பத்திரன முத்யன்சேலாகே கவீஷா நவின் குணதிலக்க, பொதுச் சொத்துச் சட்டம் உட்பட பல குற்றச்சாட்டுகளின் கீழ் ஆஜர்படுத்தப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்தார். அவர் சார்பில் சட்டத்தரணி சமிந்த அத்துகோரள ஆஜராகியிருந்த நிலையில் சந்தேகநபருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

குடியியல் ஒழுக்கவீன செயல்களைத் தண்டிப்பதற்கு சாதாரண குற்றவியல் சட்டங்களைப் பயன்படுத்துவது கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை மீறுவதாகும், எனவே இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்ப்பு உரிமையைப் பயன்படுத்துவதற்கான நியாயமான நோக்கத்தின் வெளிச்சத்தில் கருதப்பட வேண்டும். இந்த நிகழ்வில், பெட்ரோல், டீசல் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதைக் கண்டித்து மக்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில், பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ள போது, அத்தகைய சேதம் ஏற்பட்ட சூழலைக் கருத்தில் கொள்ள வேண்டியதுடன்,பொது நலன் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும். சந்தேக நபர்களை அடையாளம் காண்பது மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததில் அவர்கள் வகித்த பங்கு ஆகியவை சாட்சி கட்டத்தில் பரிசீலிக்கப்பட வேண்டும். குற்றச்சாட்டுகள் சட்டத்தால் பரிந்துரைக்கப்படாவிட்டால், அவசியமானதாக மற்றும் விகிதாசாரமாக இருந்தால், பொது எதிர்ப்பின் பின்னணியில் நடத்தப்படும் சிவில் ஒத்துழையாமை செயற்பாடுகளுக்கு குற்றவியல் சட்டத்தின் கீழ் யாரும் பொறுப்பேற்கக்கூடாது.

மாண்புமிகு நீதவான் மோதல் தொடர்பான அனைத்து கள விசாரணைகளையும் நடாத்தினார். இதில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்துகொண்டதுடன், அன்று இரவு 7 மணி வரை கள விசாரணை நீடித்தது. தொடர் சம்பவங்களை நேரில் கண்ட சாட்சிகள் பலர் தாமாக முன்வந்து நீதவான்முன்னிலையில் ஆஜராகி வாக்குமூலம் பதிவு செய்தனர்.

மோதல்கள் இடம்பெற்ற இடங்களில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதை நீதவான் அவதானித்தார். சிதறிய இரத்தக் கறைகள், குற்றச் சம்பவங்கள் மற்றும் தீப்பிடித்த முச்சக்கர வண்டியையும் அவதானித்தார்.

குற்றவியல் சட்டத்தின் 298வது பிரிவின் கீழ் குற்றச் செயல்கள் செய்யப்பட்டன என்றுகளவிசாரணைக்கான கோரிக்கையுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டு (கவனக்குறைவான மனிதக் கொலை – அதிகபட்ச தண்டனையாக ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை), மாண்புமிகு நீதவான் சம்பவ இடத்தை ஆய்வு செய்த போது பிழை திருத்தும் திரவத்தால் அழிக்கப்பட்டது.

இதன்போது, பொலிஸாரின் நடத்தை நீதவானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எச்சரித்துள்ளார். அனுமதியின்றி நீதிமன்றக் காவலில் இருந்த டீ அறிக்கையை மாற்றியதற்கு மன்னிப்புக் கேட்ட பொலிஸார் யுஅறிக்கையை ஒழுக்காற்று நடவடிக்கைக்காக பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கையிடுவதாக உறுதியளித்தனர்.

இவ்வாறான தவறுகள் இடம்பெற்றுள்ள நிலையில், பொலிஸ் அதிகாரிகள் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்வார்கள் என சந்தேகம் தெரிவித்த சட்டத்தரணிகள், தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸ் குழுவிடமிருந்து இந்த விசாரணைகளை நீக்கிவிட்டு இந்த விசாரணைகளை வேறு பொலிஸ் குழுவை நடாத்த உத்தரவிடுமாறு கௌரவ நீதிமன்றத்தை கோரியுள்ளனர்.

மேலும், குறித்த சம்பவத்தில் பொலிஸார் மிகக்குறைந்த பலத்தை பிரயோகித்ததாக ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், சுட உத்தரவு பிறப்பித்த பொலிஸ் அதிகாரி மற்றும் துப்பாக்கியால் சுட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை இறந்தவர் தொடர்பானபிரேத பரிசோதனையில் சாட்சிகளாக சேர்க்குமாறும் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 1.6 நேரில் கண்ட சாட்சிகள்

சமிந்த லக்ஷனின் மரணம் தொடர்பிலான நீதவான் விசாரணை ரம்புக்கணை நீதவான் வாசன நவரத்ன முன்னிலையில் நடைபெற்ற போது, சாட்சியமளித்த சாட்சியொருவர் (ஊடகச் செய்திகளில் இரண்டாவது சாட்சி என குறிப்பிடப்படுவதுடன்அவருடைய பெயர் தெரியவில்லை) நீதிமன்றத்திற்கு முன்பாக இவ்வாறு தெரிவித்தார்.

“மதியம் 2 மணியளவில் நான் எரிபொருள் வாங்கச் சென்றேன். அப்போது, எரிபொருள் வரவில்லை. அங்கு போராட்டம் நடந்தது. நானும் அதில் கலந்து கொண்டேன். இரண்டு பவுசர்கள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில்தான் போராட்டக் குழுவினர் இருந்தனர். பொலிஸார் ஆரம்பத்தில் கேகாலை வீதியின் ஒரு ஓரத்தில் இருந்தனர். அதற்கு முன்பாக ஒரு முச்சக்கர வண்டியின் பின்னால் மூன்று பொலிஸார் நின்றிருந்தனர். போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் நடுவில் நான் இருந்தேன்.

“முச்சக்கர வண்டியின் பின்னால் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களில் அரச இலச்சினையும் தோளில் இரண்டு நட்சத்திரங்களும் அணிந்திருந்த ஒரு சிரேஷ்ட அதிகாரியும் இருந்தார். சிறிது நேரத்தில் சிவில் உடையில் மூன்று பேர் அங்கு வந்தனர். அந்த நபர்கள் யார் என்று எனக்குத் தெரியாது. பொலீஸாரை கற்களால் தாக்கினர். அப்போது அந்த சிரேஷ்ட அதிகாரி கண்ணீர் புகை குண்டுகளை வீச உத்தரவிட்டார். இதையடுத்து, மூன்று பொலிஸாரும் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

”அப்போது சிரேஷ்ட அதிகாரி, “இது வேலைக்கு ஆகாது, அவர்களை சுட்டுக் கொல்லுங்கள்“ என்று கூறினார். பின்னர் பொலீஸார் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். நான் மடவளை வீதியில் ஓடினேன். என்னுடன் இன்னும் பலர் ஓடினர். பொலீஸ ார் எங்களைத் துரத்திச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்தினர். நாங்கள் ஓடும்போது பொலீசார் எங்களை சுட்டனர். ஓடிப்போய் ஒரு கோவிலுக்குள் நின்றேன்.

**நேரில் கண்ட சாட்சி பி. இந்திக்கவின் சாட்சியம்**

“காலையிலிருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ரம்புக்கணையில் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறான வேளையில் அத்தியாவசியப் பொருளான எரிபொருளின் விலையேற்றத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடாத்த விரும்பினர். அம்புலன்ஸ், பாடசாலை வாகனங்கள் வீதியை கடக்க அனுமதிக்கப்பட்டன. விலையைக் குறைத்து பழைய விலைக்கே எரிபொருளை விற்க வேண்டும் என்றுதான் கேட்டோம். எரிபொருள் பவுசர் கூட்டுறவு சேவைகள் எரிபொருள் நிரப்பு நிலையத்தை வந்தடைந்த போது, எரிபொருள் பவுசர் வேண்டுமென்றே கூட்டுறவு நிர்வாகத்தால் தாமதப்படுத்தப்பட்டதாக போராட்டக்காரர்கள் நம்பினர். அந்த போராட்டத்தில் இன பாகுபாடு இல்லை. ரம்புக்கணை வைத்தியசாலையின் வைத்தியர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். ரம்புக்கணை பொலிஸாரும் இந்த அமைதியான போராட்டத்திற்கு ஆதரவளித்துள்ளனர். இரண்டாவது எரிபொருள் பவுசர் வந்த பின்னர், எமது கோரிக்கையை பொலிஸாரிடம் சமர்ப்பித்தோம். எங்களின் கோரிக்கையை பொலீஸார் நிராகரித்ததையடுத்து,பவுசர் மூலமாக புகையிரதப் பாதையை மறித்து மீண்டும் போராட்டத்தை தொடங்கினோம். பவுசர்களுக்கு முழு பாதுகாப்பு கொடுத்தோம். சிகரெட்டுடன் பவுசருக்கு அருகில் யாரும் வர அனுமதிக்கப்படவில்லை. ஊர் பெண்கள் வந்து போராட்டக்காரர்களுக்கு உணவும் பானமும் தயார் செய்தனர். ரம்புக்கணை பொலிஸ் அதிகாரிகளுக்கும் உணவில் ஒரு பகுதியை வழங்கினோம். போராட்டக்காரர்கள் பவுசர் ஓட்டுநருக்கு உணவும் வழங்கினர். நாங்கள் உணவு தயாரித்துக் கொண்டிருந்த போது கண்ணீர் புகை குண்டு வீச்சு ஆரம்பமாகியது.

“புகையிரதப் பாதையில் இருந்து கற்களை சேகரித்தோம், போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பொலிஸாரை கற்களால் தாக்கினர். அப்போது, கூட்டத்தைக் கலைக்க விசேட அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டு, போராட்டக்காரர்கள் மீது இடைவிடாது தாக்குதல் நடத்தினர். தாக்குதலின் போது துப்பாக்கிச் சூடு எதுவும் நடைபெறவில்லை என்பதுடன் தாக்குதலைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதான வீதியூடாக பின்னவல நோக்கி ஓடினர். போராட்டத்தின் போது சுடப்பட்ட நபர் பின்னவல நோக்கி ஓடவில்லை. எரிவாயு நிலையத்தை நோக்கி ஓடினார். அவர் ஓடி வந்து பெட்ரோல் நிலையம் அருகே விழுந்தபோது பொலீஸார் அவரது வயிற்றில் சுட்டனர். நேரில் கண்ட சாட்சிகள் உள்ளனர். முதலில் எரிபொருள் நிலையத்தில் இருந்த சிசிடிவி கேமராக்களை பொலீஸார் அடித்து நொருக்கினர். பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு தீ வைக்க முயன்றதோடு, போராட்டக்காரர்கள் மீது பழியை சுமத்தினார்கள்”.

**சம்பவத்தை நேரில் பார்த்த சுசந்த அனுர குமார நீதிமன்றத்தின் முன்பாக சாட்சியம் அளித்தார்**

“கிரிசுத்தா என்ற சமிந்த லக்ஷனின் பைக் வரிசையில் ஆறாவது இடத்தில் இருந்தது. அவர் எரிபொருள் நிலையத்திலிருந்து சரியாக 20 மீட்டர் தொலைவில் சுடப்பட்டார். சுவரின் மறுபுறத்தில் இருந்த முச்சக்கர வண்டி தீப்பற்றி எரிந்தது. அதன் பிறகு ஓயாமல் சுடத் தொடங்கினர். பின்னர் கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன” என்றார்.

**ரம்புக்கணை சம்பவத்தின் போது தீ வைத்து எரிக்கப்பட்ட முச்சக்கர வண்டி உரிமையாளரின் சாட்சியம்**

“நான் போராட்டத்தைத் ஆரம்பித்தேன். ஊரில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் நாங்கள் நால்வர் போராட்டத்தைத் தொடங்கினோம். கூட்டம் மெல்ல திரண்டது. நாங்கள் எதிர்பார்க்காத வகையில் பெருந்திரளான மக்கள் திரண்ட பிறகு போராட்டத்தை முன்னின்று நடத்த வேண்டியதாயிற்று. மதியம் வரை பொலீஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இருந்தனர். அதன் பின்னர் கேகாலை பொலிஸ் உயர் அதிகாரிகள் சிலர் போராட்ட இடத்திற்கு வந்தனர். இரண்டாவது எரிபொருள் பவுசர் வந்த பின்னர், நான் OIC ஐச் சந்தித்து, விலையேற்றம் அமுல்படுத்தப்படும் வரை எரிபொருள் பவுசரை மறைத்து வைத்திருந்ததாகவும், தாமதமாக கொண்டு வந்த எரிபொருளை அதே விலைக்கு விற்குமாறும் கோரிக்கை விடுத்தேன். OIC‘எனக்கு அறிவுரை சொல்ல நீர் யார்?’ என்று கேட்டு மிரட்டினார். நான் முச்சக்கர வண்டி சாரதியாக இருப்பதால் கவனமாக இருக்குமாறு போக்குவரத்து முஜஊஎன்னை எச்சரித்தார். இந்தப் போராட்டம் நீண்ட நாள் நீடிக்காது என்றார். போராட்டக்காரர்கள் தாக்கப்படுவார்கள் என்பதை புரிந்துகொண்டேன். எனது அண்ணனின் கடைக்கு சென்று நான் அணிந்திருந்த சட்டையை கழற்றிவிட்டு புதிய சட்டையை கேட்டேன். அதை அணிந்து கொண்டு நான் எனது முச்சக்கர வண்டியை நிறுத்தியிருந்த ரயில்வே விடுதிக்கு வந்தேன். அப்போது, புத்தர் சிலைக்கு அருகாமையில் இருந்த ரம்புக்கணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கறுப்பு உடை அணிந்த இரண்டு அதிகாரிகளிடம் என்னைக் காட்டினார். அந்த நபர்கள் தங்களின் கைகளில் துப்பாக்கிகளை வைத்திருந்தனர். அவர்கள் முச்சக்கர வண்டியை நோக்கி வந்ததும் நான் வெளியே குதித்து ஓடினேன். நான் பழைய விடுதியின் பின்னால் இருந்து வந்து முச்சக்கரவண்டிக்கு அருகாமையில் உள்ள ஒரு பலா மரத்தின் அருகே அமர்நதேன். அப்போது அண்ணன் தன் வீட்டில் ஜன்னல் வழியாக நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தான். எப்படியோ ஐந்து அதிகாரிகள் அங்கு வந்து, முதலில் வந்த இருவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த கூடாரத்தை அகற்றிவிட்டு முச்சக்கரவண்டிக்கு லைட்டரால் தீ வைத்தனர். முச்சக்கரவண்டியின் கூரை முற்றாக தீப்பிடிக்கும் வரை நான்

அந்த இடத்திலேயே இருந்தேன். கடைசியாக என்னால் காத்திருக்க முடியவில்லை. ஆகவே சுவர் ஏறி குதித்துரயில்வே குவாரியில் தூங்கச் சென்றேன். சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் எனது அண்ணன் எனக்கு போன் செய்து முச்சக்கர வண்டியில் எதுவுமே மிச்சமில்லை என்று கூறினார்.

**இறந்த சமிந்த லக்ஷனின் மனைவி ஏப்ரல் 27 அன்று நீதிமன்றத்தின் முன்பாக கூறிய கருத்துக்கள்**

“நீதிமன்றத்தில் நீதி கிடைக்கும் என்று நம்புகிறேன். அப்படி நடக்குமா என்று தெரியவில்லை. இரண்டு குழந்தைகளின் எதிர்காலத்திற்காக இழப்பீடு கேட்கிறேன். அது கண்டிப்பாக கிடைக்க வேண்டும். என் கணவரின் மதிப்பை அவர்களால் ஒருபோதும் கொடுக்க முடியாது.

சமிந்த லக்ஷனின் மனைவியான திருமதி சமன் பிரியங்கனி (2022) 11 பிரதிவாதிகளுக்கு எதிராக கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் ஜூலை (18) வழக்குத் தாக்கல் செய்து ரூ. 50 மில்லியன் இழப்பீட்டையும்நீதிமன்றம் பொருத்தமானதாகக் கருதுகின்றசட்டக் கட்டணம் மற்றும் பிற நிவாரணங்களை கோரினார்.

## 2. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த கே.டி. அஷேன் சமிகர சமரநாயக்க

ரம்புக்கணை, கிரிவல்லபிட்டிய, இஹல அத்வத்தே வத்தையில் வசிக்கும் 24 வயதுடைய அஷேன் சமிகர சமரநாயக்க என்ற திருமணமாகாத இளைஞன் தம்ரோ நிறுவனத்தில் ஊழியராக பணியாற்றி வந்துள்ளார்.

19 ஆம் திகதி நடந்த சம்பவம் குறித்து, நேர்காணலில் கலந்து கொள்வதற்காக அன்று காலை 7.45 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறியதாக அஷேன் கூறுகிறார். ஆனால் ரம்புக்கணை நகரில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக டயர்களுக்கு தீ வைக்கப்பட்டதுடன் வீதிகள் அனைத்தும் மூடப்பட்டன. அவர் தனது நண்பருடன் சம்பவம் தொடங்கிய எரிபொருள் நிலையத்திற்குச் சென்றார்.சுமார் 9.30 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு வீட்டிற்கு வந்த அவர் மீண்டும் தனது நண்பர்களுடன் 11.00 மணியளவில் ரம்புக்கணை நகருக்குச் சென்றுள்ளார். அவரைப் பொறுத்தவரை, அந்த நேரத்தில் மக்கள் கூட்டம் அதிகரித்தது. போலிஸார் எரிபொருள் நிலையம் அருகே வந்துள்ளனர். அதன்பிறகு, எரிபொருள் நிலையத்திலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர், நான் தீப்பிடித்துவிடுமோ என்று அச்சப்பட்டேன். அதன் பிறகு, சில பிக்குகள் மட்டுமே உள்ளே இருந்தனர். சுற்றுவட்டாரத்தை நோக்கி நடந்து சென்று திரும்பி வந்தபோது, புகையிரத கடவையை அடைத்து கொண்டு எரிபொருள் பவுசர் நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டதாக அவர் கூறுகிறார். இதனால் புகையிரதமும் நிறுத்தப்பட்டது. சுமார் 2.30 மணிக்கு அவர் வீட்டிற்கு வந்தார். அப்போது இராணுவத்தில் பணிபுரியும் தனது நண்பர் ஒருவரிடமிருந்து அவருக்கு தொலைபேசி அழைப்பு வந்ததாகவும்,ரம்புக்கணை நகரில் நிலைமை மோசமடைந்துள்ளதாகவும், மக்களை விரட்டுவதற்காக பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசுவதாகவும் தெரிவித்தார். அப்போது அவர்களது சகோதரர் அசிருமய சமரநாயக்க, எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குப் பக்கத்தில் அமைந்துள்ள கார்கில்ஸ் ஃபுட் சிட்டியில் வேலை செய்து கொண்டிருந்தார். அஷேன் அவரை தொடர்பு கொள்ள பலமுறை போன் செய்தும், அது முடியாமல் போனதால், அஷேன் தனது நண்பருடன் மதியம் 3.45 மணியளவில் தனது சகோதரனை கூட்டி வருவதற்காக நகருக்கு வந்தார்.

மோட்டார் சைக்கிளை நண்பனிடம் கொடுத்துவிட்டு கார்கில்ஸ் நிலையத்தை நோக்கி நடந்தார். பொலிஸார் பல கண்ணீர் புகை குண்டுகளை வீசியதுடன் அஷேன் மீது கற்களை வீசினர். அதன்பின், முகம் கழுவிய பின்னர், ரயில் தண்டவாளத்தில் நடந்தார். அப்போது,பொலீஸார் அவர் மீது கற்களை வீசத் தொடங்கினர். அவரும் பொலிஸார் மீது கற்களை வீசினார். திடீரென தனக்கு அருகில் தோட்டா ஒன்று சுடப்பட்டதை உணர்ந்த அவர் சில நொடிகளில் திரும்பி ஓடத் தொடங்கினார். முதலில் வலது கையில் துப்பாக்கியால் சுடப்பட்ட அவர், அதன் பிறகு, ஃபுட் சிட்டியை நோக்கி ஓடும்போது காலிலும் சுடப்பட்டார். பெற்றோல் நிலையம் அருகே மயங்கி விழும் நிலையில் இருந்ததாகவும், அருகில் இருந்தவர்கள் அவரை பிடித்ததாகவும் கூறினார். அதன்பிறகு என்ன நடந்தது என்பது சரியாக நினைவில் இல்லை என்று அவர் கூறினார்.

சுமார் 4.00 மணியளவில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதுடன் ஐந்து முதல் பத்து நிமிடங்களுக்குள் முச்சக்கர வண்டியில் ரம்புக்கணை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு நிலைமை பாரதூரமானதாக இருந்ததால் தனியார் வானில் கேகாலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

கையின் எலும்புகள் உடைந்துள்ளதால் அதை மீட்டெடுக்க முடியாது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அன்று காயங்களுக்கு மட்டும் தையல் போட்டு கட்டு போட்டு மறுநாள் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. சுமார் ஒரு வாரமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். வீட்டுக்கு வந்து இரண்டு நாட்களில் காயத்தில் இருந்து ரத்தம் வெளியேறியதால் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 3 1/2மணி நேரத்திற்கும் மேலாக சத்திரசிகிச்சைமேற்கொள்ளப்பட்டதாக கூறினார். அப்போது, சுமார் ஒருவாரம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, வலது கையை சரிசெய்வதற்கான சத்திரசிகிச்சைக்கு தேவையான வயரை தனது சொந்த செலவில் கொள்வனவு செய்ய வேண்டும் எனவும், அதற்கு சுமார் 80,000ரூபா செலவாகும் எனவும் அஷேன் தெரிவித்தார். வேலை செய்யஇயலாமையால் வேலையை இழந்துள்ளார்.

### 3 படுகாயமடைந்த D.P. கமல் ஹேமஜித் குமார

41 வயதான திரு. டி.பி. கமல் ஹேமஜித் குமார, யோதகம,ரம்புக்கணையில் வசிக்கும் மேசனாக தொழில் புரிபவராவார். அவர் திருமணமானதுடன் இரண்டு குழந்தைகளின் தந்தையாவார்.

ஏப்ரல் 19ஆம் திகதி,ரம்புக்கணை துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு முன்னர், தனது மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக காலை 10.30 மணியளவில் ரம்புக்கணை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வந்துள்ளார். எரிபொருள்நிரப்பும்நிலையத்தில்எரிபொருள்இல்லாததைஅறிந்துஆர்ப்பாட்டம்ஒன்றுநடத்தப்பட்டதையடுத்து,ரம்புக்கணை புகையிரத நிலைய விடுதியில்மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு ஆர்ப்பாட்ட இடத்திற்கு வந்துள்ளார். அங்கு சிறிது நேரம் தங்கியிருந்த கமல் நூடில்ஸ் சமைத்து போராட்டக்காரர்களுக்கு விநியோகம் செய்யவும் உதவினார். ரம்புக்கணை எரிபொருள் நிரப்பு நிலையப் பகுதியில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் உணவு பரிமாறப்பட்டதுடன், சுற்றுப்புறச் சூழல் மிகவும் அமைதியானதாக இருந்ததாக அவர் தெரிவித்தார். பின்னர் பிற்பகல் 3.30 மணியளவில் எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் குழு அங்கிருந்து சென்றது. இதற்கிடையில் மற்றொரு எரிபொருள் பவுசர் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வந்தது. இரு பவுசர்களையும் பொலீஸார் அப்புறப்படுத்த மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், சூழ்நிலை சூடுபிடித்ததாக கமல் கூறினார்.

மாலை 4.00 மணியளவில், மக்கள் கொந்தளித்ததால்,பொலீஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். ரயில் பாதையில் நடந்து செல்லும் போது, குழு கலைந்து சென்றதை கமல் கவனித்தார். இருப்பினும்,பொலீஸார் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் வந்தனர். முச்சக்கர வண்டி ஒன்று எரிவதைக் கண்டார். எரியும் முச்சக்கரவண்டிக்கு அருகில் தனது மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த இடத்தில் இருந்து அகற்றப்பட்டு வேறு இடத்தில் நிறுத்தப்பட்டிருந்ததாக அவர் கூறுகிறார். மாலை 5.45 மணியளவில் ரயில்பாதையைக் கடந்து முன்பக்க வலை வழியாக ஊர்ந்து சென்றபோது துப்பாக்கியால் சுடப்பட்டார். அதன் பின்னர் அருகில் இருந்த பலர் மோட்டார் சைக்கிளில் ரம்புக்கணை பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அவரது நிலைமை மோசமாக இருந்ததால் கேகாலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அதன் பிறகு, 16 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார்.

இச்சம்பவத்தில் கமல் ஹேமஜித் குமாரவுக்கு மார்பில் இருந்து தொப்புள் வரை பலத்த காயம் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவரது வயிற்றுப்பகுதி தைக்கப்பட்டுள்ளது.

ஒரு மேசனாக,நாளாந்தம் வருமானம் ஈட்டும் தொழிலாளியான இவர், மேற்கூறிய உடல் நலக்குறைவு காரணமாக, தனது அன்றாடப் பணிகளில் சாதாரணமாக ஈடுபட முடியாதுள்ளதுடன், ஒரு வருடத்திற்கு மேல் பாரமான வேலைகளில் ஈடுபட வேண்டாம் என்று மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவரது மனைவி தொழில் செய்பவர் அல்ல என்பதால், 13 மற்றும் 10 வயதுடைய பாடசாலை செல்லும் இரண்டு குழந்தைகளுடன் வாடகை வீட்டில் வசிக்கும் அவர்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

18 ஜூலை 2022 அன்று, திரு. கமல் ஹேமஜித் குமார 11 பிரதிவாதிகளுக்கு எதிராக கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் (வழக்கு எண். 11412/22) வாதியை சட்டவிரோதமாகவும், கொடூரமாகவும் மற்றும் தீங்கிழைக்கும் வகையில் சுட்டதற்காக வழக்குத் தாக்கல் செய்தார். வாதி தனது பாதுகாப்பிற்கான உரிமை மீறப்பட்டதாகவும், தெருவில் சுதந்திரமாக நடமாடும்

உரிமை மீறப்பட்டதாகவும், சுதந்திரமாக வேலை செய்யும் உரிமையும் மீறப்பட்டதாக அறிவித்தார். இதன்படி, பிரதிவாதிகளின் மேற்கூறிய சட்டவிரோத நடவடிக்கைகளினால் முறைப்பாட்டாளருக்கு ஏற்பட்ட நட்டஈட்டை பிரதிவாதிகள் வழங்குமாறு நீதிமன்றத்தை கோரியுள்ளார். அவர் இழப்பீடாக ரூ.20,297,000 இனை நட்டஈடாக எதிர்பார்க்கின்றார்.

### 4. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த புத்திக லக்ஷான் எதிரிசிங்க

ரம்புக்கணை, ஹடகம நு 2/1 இல் வசிக்கும் வியன்னலகே புத்திக லக்ஷான் எதிரிசிங்க, வயது 23,கடல்சார் இயந்திரவியல் (marine engineering) கற்கும் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனாவார்.இவர் தனது சகோதரி, தாய், தந்தையுடன் வீட்டில் வசித்து வருகிறார்.

இவர் கடந்த ஏப்ரல் 19ம் திகதி காலை தனது சகோதரியை பாடசாலைக்கு விடுவதற்காக வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். ஊருக்குள் நுழைந்த அவர், கூட்டம் கூடுவதைக் கண்டு விசாரித்தபோது, எரிபொருள் நிரப்பு நிலையம் அருகே எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது. புத்திகவும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு மிகவும் அமைதியான முறையில் நடந்ததாக தெரிவித்தார். புத்திக மற்றும் அவரது பெற்றோர்களும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். எந்த பிரச்சினையும் இல்லாமல் நாள் கழிந்ததாகவும், அந்த இடத்தில் பொலீஸாரும் இருந்ததாகவும் கூறினார்.

பின்னர் 3.30 மணி முதல் 4.00 மணிக்குள் வீட்டுக்கு வந்தார். மதிய உணவு உண்ட பின்னர் புத்திக்க தனது உறவினருடன் மீண்டும் ரம்புக்கணை நகருக்கு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார். வழியில் அவர்களை பொலீஸார் தடுத்து நிறுத்தி நகருக்குள் செல்ல விடாமல் தடுத்தனர். அதன்பின் அவர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு பவுசரை நோக்கி சென்றனர். பொலீஸார் மற்றும் போராட்டக்காரர்களின் நடத்தை கொந்தளிப்பாக இருந்ததுடன்,பொலீஸார் போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை மற்றும் கற்களை வீசினர். போராட்டக்காரர்களும் பொலீஸார் மீது கற்கள் மற்றும் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். புத்திக்கவும் இதில் நேரடியாக ஈடுபட்டதுடன், பின்னால் இருந்த பவுசருக்கு முன்பாக அவர் இருந்தார். அருகாமையில் கண்ணீர் புகை குண்டுகள் வெடித்ததையடுத்து, குழு ஓட ஆரம்பித்தது, புத்திக மடபத்த வீதியை நோக்கி ஓடினார். பொலீஸார் அவர்களை விரட்டிச்சென்று கண்ணீர் புகை மற்றும் கற்களை வீசினர். அப்போது புத்திக பிரதான வீதியில் இருந்து 75 மீற்றர் தூரத்தில் இருந்ததால் சுடப்படுவேன் என்றுஎண்ணவில்லை. ஒரு கட்டத்தில் வலது கால் வழியாக மின்சாரம் செல்வது போல் வலி ஏற்பட்டது. அதே சமயம்,அவர் தரையில் விழுந்து, மிகவும் சிரமப்பட்டு ஒரு காலால் துள்ளிக் குதித்து, மீண்டும் சுடப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் அந்த இடத்திலிருந்து வீதியின் மறுபுறம் நகர்ந்தார். தொடர்ந்து கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், கற்களை வீசியும் பொலீஸார் தடியடி நடத்தினர், அதற்குள் புத்திகவின் வலது காலிலிருந்து ஏராளமாக ரத்தம் வழிந்ததாலும் எதுவும் செய்ய முடியாமல் வீதியோரம் தரையில் அமர்ந்திருந்தார். அப்போது, பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த அசங்க நிலனும் மறுபுறம் வீழ்ந்துள்ளார். அதேநேரம் முகமூடி அணிந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வந்து புத்திகவின் முதுகில் தடியினால் அடித்தனர். அந்த வடுக்கள் இன்னும் இருக்கின்றன என்கிறார். அப்படித் தாக்கிய பிறகு,"நீ இங்கேயே இருந்து கஷ்டப்படு" என்றார்கள்.

அவர்கள் சென்ற பிறகு, புத்திக அதே இடத்தில் சுமார் 20 நிமிடங்களுக்கு காலில் ரத்தம் வெளியேற அமர்ந்திருந்தார். அப்போது, அந்த இடத்திற்கு வந்த அவரது உறவினர்,பொலீஸ் அதிகாரி ஒருவருடன் சேர்ந்து, அவரை பிரதான வீதியின் ஓரமாக தூக்கிச் சென்று தரையில் அமர வைத்தார். அந்த இடத்திலும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் புத்திகவின் முதுகில் எட்டி உதைத்து திட்டிவிட்டு நடுவீதிக்கு செல்லுமாறு கூறியுள்ளார். ஆனால் அங்கிருந்த மற்றொரு சிரேஸ்ட அதிகாரி கால் உடைந்துள்ளதால் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கூறினார்.

இந்த நிகழ்வுகளுக்குப் பிறகு,அம்புலன்ஸ் வந்தது, அவரது உறவினர் அவரை அதில் ஏற்றி கேகாலை மருத்துவமனைக்கு அனுப்பினார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அதே இரவில் காயம் சுத்தம் செய்யப்பட்டதுடன், காயம் குணமாகும் வரை உடைந்த கால்பொருந்தாது என்பதால் சுமார் ஒரு வாரம் மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தார். ஒரு வாரம் கழித்து வீட்டுக்கு அனுப்பிவிட்டு மூன்று நாட்களில் வரச் சொன்னார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, கால் எலும்பில் இரும்பு கம்பி பொருத்தப்பட்டது. பிரதான எலும்பு முற்றாக நொருங்கியதால் கண்டி பொது வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்து அதனை சரிசெய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தச் சம்பவத்தின் தாக்கம் அவருடைய கல்வியிலும் எதிர்காலத்திலும் பாரியதாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. சுமார் நான்கு மாதங்கள், அவரது பல்கலைக்கழகப் படிப்பு முற்றிலும் நிறுத்தப்பட்டது. விபத்து நடந்த நேரத்தில், அவர் ஏப்ரல் 9 ஆம் திகதி துறைமுக தொழில்நுட்பப் பயிற்சியில் சேரத் திட்டமிடப்பட்டிருந்தார், விபத்துக்குப் பிறகு அதில் பங்கேற்க முடியவில்லை.

### 5. பொலிஸாரால் தாக்கப்பட்ட 18 வயது பாடசாலை மாணவன்

அம்கு அம்பே கிராமத்தில் வசிக்கும் பத்திரன முதியன்செலாகே கவீஷ நவீன் குணதிலக்க,18 வயதுடைய பின்னவல மத்திய கல்லூரியின் பாடசாலை மாணவராவார்.

அவரின் கூற்றுப்படி, ஏப்ரல் (19) அன்று ரம்புக்கணை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று இடம்பெற்றதாகவும், அதில் தனது உறவினரான புத்திக லக்ஷனும் இணைந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். அன்று மதியம் கவீஷவும் போராட்ட இடத்திற்கு சென்றார். அப்போது அமைதியான சூழல் நிலவியதாக அவர் கூறினார். மதிய உணவு சாப்பிட்டுவிட்டு கவீஷவும் அவரது சகோதரரும் போராட்டம் நடந்து கொண்டிருந்த இடத்திற்கு திரும்பினர். அதற்குள் எரிபொருள் நிலையப் பகுதிக்கு பொலீஸார் வரவழைக்கப்பட்டிருந்ததால், பிரச்சினை இருக்காது என நினைத்து, கவீஷவும், அவரது சகோதரரும் உள்ளே நுழைந்தனர். 10 நிமிடங்கள் சென்றதும், பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி போராட்டக்காரர்களை கலைக்க முற்பட்டதாகவும், பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசிய போது கவீஷ, புத்திக உள்ளிட்ட போராட்டக்காரர்கள் வீதியில் சிக்கிக் கொண்டதாகவும்அவர் குறிப்பிடுகிறார். அப்போது அவரது உறவினர் துப்பாக்கியால் சுடப்பட்டு கீழே விழுந்தார். கவீஷஅவரை வீதியோரம் உட்கார வைத்ததுடன், சிறிது நேரத்தில் பொலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து கவீஷவை விரட்டினர். அவர் தனது உறவினரும் மேலும் ஒருவரும் தாக்கப்பட்டதைப் பார்த்தார். கவீஷ தனது உறவினர் சுடப்பட்டதாக ஒரு பொலீஸ் அதிகாரிக்கு தெரிவித்ததுடன், இருவரும் அவரை அந்த இடத்திலிருந்து தூக்கிச் சென்றனர். கவீஷ தனது சகோதரனை சிரமப்பட்டு அம்புலன்சில் ஏற்றினார். அப்போதுபொலீஸ ார் கவீஷவை அடித்து,பொலீஸ் ஜீப்பில் ஏற்றினர். ஜீப்பிற்குள்ளேயும் அவர் தாக்கப்பட்டார். ரம்புக்கணை பொலிஸாரிடம் அழைத்துச் செல்லப்பட்ட அவர், ஒன்றரை நாட்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். தனக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதை புரிந்து கொண்ட அவர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னரே அந்த குற்றச்சாட்டுகள் குறித்து அவருக்கு ஒரு புரிதல்ஏற்பட்டது. அவர் மீதான வழக்கு செப்ரெம்பர் 29ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

### 6. பொலிஸாரால் சுடப்பட்ட M.G. சஹான் ஹசித, 14 வயது பாடசாலை மாணவர்

ரம்புக்கணை, ஹரிமலுவ பகுதியைச் சேர்ந்த M.G. சஹான் ஹசித, 14 வயதுடைய பாடசாலை மாணவனாவான். அவரது தாயார் N.P. ஸ்ரீயலதாவின் கூற்றுப்படி, ஏப்ரல் 19 அன்று, ஹசித பாடசாலையிலிருந்து மதியம் 2.30 மணியளவில் திரும்பியதுடன், மாலை 4.30 மணியளவில் ரம்புக்கணை நகருக்கு ஒரு நண்பருடன்சென்றார். மாலை 5.30 மணியளவில் ரம்புக்கணை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது அவர் சுடப்பட்டதாக ஸ்ரீயலதா கேள்விப்பட்டார். அதன் பின்னர், கேகாலை வைத்தியசாலைக்குச் சென்ற அவர், சஹான் ஹசிதவின் கை மற்றும் இடுப்புப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதை அறிந்துகொண்டார். துப்பாக்கிச் சூட்டில் அவரது கையில் எலும்புகள் உடைந்து, இடுப்பு பகுதியில் உள்ள காயத்திற்கு ஆறு தையல்கள் போடப்பட்டன. மருத்துவமனையில் நான்கு நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு, சஹான் ஹசித தனது வீட்டிற்குத் திரும்பினார், ஆனால் அவ்வப்போது அவருக்கு மருத்துவப் பிரச்சினைகள் ஏற்படுவதால் தொடர்ந்து சிகிச்சைகளை மேற்கொண்டு வருகிறார்.

### 7. பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சஹிது ரங்கன

F 6/20, முன்கொட்டுவ,ரம்புக்கணை என்ற முகவரியில் வசிக்கும் E.G. சஹிந்து ரங்கனவுக்கு 18 வயதாகும். க.பொ. தசாதாரண தரம் வரை மட்டுமே படித்துள்ளார். ஏப்ரல் 19ஆம் திகதி, தனது பணியை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்த அவர், சஹான் ஹசிதவுடன் மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் ரம்புக்கணை எரிபொருள்

நிரப்பு நிலையத்திற்கு மாலை 4.30 மணியளவில் வந்துள்ளார். அதற்குள் அங்கு அமைதியின்மை ஏற்பட்டதுடன் சஹானும் சஹிந்துவும் ஏனைய எதிர்ப்பாளர்களுடன் மடவளை வீதிக்கு தள்ளப்பட்டனர். சஹான் ஹசித முதலில் சுடப்பட்டதாகவும், தனது நண்பரின் நிலையைப் பார்க்கச் சென்றபோது சஹிந்துவும் சுடப்பட்டதாகவும் அவர் கூறுகிறார். அப்போது அவர் மயங்கி விழுந்தார். பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்த சஹிதுவுக்கு இரண்டு சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. அவருக்கு அடிவயிற்றில் உள் காயங்களும், காலில் ரத்தக் கட்டியும் இருந்தது. இவற்றிற்கான சத்திரசிகிச்சைகள் கேகாலை மற்றும் கண்டி வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்டன. ஒரு மாதமும் ஒரு நாளும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் அவரை, சுமார் ஒரு வருடத்திற்கு கடுமையான வேலைகளில் ஈடுபட வேண்டாம் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

பிரதிவாதிகளின் சட்டவிரோத நடவடிக்கைகளால்,மனுதாரர் உடல் மற்றும் உள வலி,உள அச்சுறுத்தல் மற்றும் உயிருக்கு அச்சுறுத்தல் ஆகியவற்றை அனுபவித்ததாக சாஹிது ரங்கன 11 பிரதிவாதிகளுக்கு எதிராக 2022 ஜுலை 18 அன்று கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அவர் ரூ. 20 மில்லியன் ரூபாவை பொது சேதம் மற்றும் தண்டனை சேதங்களாகவும் மற்றும் விசேட சேதங்களாகரூ. 245,000 இனையும் கோரியுள்ளார்.

## 8. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த R.E.A. சமிந்த குமார ராஜபக்ஷ

27/179, தியசுன்னத்த,ரம்புக்கணை என்ற முகவரியில் வசிக்கும் 37 வயதான திரு. சமிந்த குமார ராஜபக்ஷ, சுகாதாரபராமரிப்பு உதவியாளராகப் பணிபுரிகிறார். இவர் திருமணமாகி ஒரு குழந்தையின் தந்தை ஆவார்.

சமிந்த குமார கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி ரம்புக்கணையில் இடம்பெற்ற தனது உறவினரின் இறுதிக் கிரியைகளின் பின்னர் வேலைக்குச் சென்றுள்ளார். ஏப்ரல் 19ஆம் திகதி ரம்புக்கணை சம்பவத்தின் போது பொலிஸாரால் வீசப்பட்ட கண்ணீர் புகை குண்டுகள் அவர் தங்கியிருந்த அவரது உறவினரின் வீட்டிற்கு அண்டிய இடத்தில் விழுந்தது. மாலை 4 மணியளவில் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக வீட்டிற்கு வெளியே வந்தார். சில நிமிடங்களின் பின்னர் சமிந்த குமார அடிவயிற்றில் சுடப்பட்டார். அப்போது அங்கிருந்த இருவர் அவரையும் உயிரிழந்த சமிந்த லக்ஷனுடன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயம் அடைந்த மேலும் இருவரையும் லொறியில் ஏற்றியதுடன் அவர்கள் வைத்தியசாலையிக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர். முதலில் அவர்கள் ரம்புக்கணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கேகாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

## 9. சுடப்பட்டு காயமடைந்த W.D மிலங்க ஹம்சக விக்ரமசூரிய

19 வயதான W.D மிலங்க ஹன்சக விக்ரமசூரிய, சம்பவத்திற்கு முன்னர் அப்பகுதியில் கடை உதவியாளராக பணியாற்றி வந்தார்.

ஏப்ரல் 19 அன்று, அவரும் அவரது நண்பர்கள் சிலரும் போராட்டம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றதுடன் முதலில் கண்ணீர் புகைக் குண்டுகளால் வீசி தாக்கப்பட்டனர். பின்னர் முகம் கழுவிவிட்டு வீடு திரும்ப போகும் போது காலில் துப்பாக்கியால் சுடப்பட்டார். அவரது கணுக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச மற்றும் உள்ளூர் சிவில் சமூகத்திடமிருந்தான பதிலளிப்பு

ரம்புக்கணையில் பொதுமக்களானஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக அதிகாரிகளால் பயன்படுத்தப்பட்ட அதிகப்படியான பலம் மற்றும் அதனால் ஏற்பட்ட மரணம் மற்றும் காயங்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச சிவில் சமூகம் மற்றும் இலங்கையில் உள்ள இராஜதந்திர தூதரகங்களால் பரவலாகக் கண்டிக்கப்பட்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் சுதந்திரமான விசாரணைகளை கோரியுள்ளன.

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
**BAR ASSOCIATION OF SRI LANKA**

19.04 2022.

**STATEMENT BY THE BAR ASSOCIATION OF SRI LANKA ON THE INCIDENT AT RAMBUKKANA**

The BASL is shocked and saddened at the loss of life in the incident this evening at Rambukkana where the police are alleged to have shot at protesters. An independent investigation must be done and the Government must ensure that the police and armed forces act with utmost restraint in the light of the genuine grievances of protesters. We are saddened that previous warnings made by us as far back as January 2022 went unheeded by the authorities. Our members will continue to do their utmost to safeguard the rights of the people of this country. A detailed statement will follow.

**SALIYA PIERIS, PC**
**PRESIDENT**
**BAR ASSOCIATION OF SRI LANKA**

**ISURU BALAPATABENDI**
**SECRETARY**
**BAR ASSOCIATION OF SRI LANKA**

# ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு ஏப்ரல் 20, 2022 அன்று குற்றம் நடந்த இடத்திற்கு வந்து தளத்தில் ஆரம்ப விசாரணையை மேற்கொண்டது. 24 ஏப்ரல் 2022 அன்று, பொது பாதுகாப்பு அமைச்சர், துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து சுதந்திரமான விசாரணையை நடத்துமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்தார் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 14வது பிரிவின் கீழ் சுயாதீன விசாரணையை நடத்துவதற்கான ஆணையைக் கொண்ட பல்துறை நிபுணர்கள் குழுவை நியமித்தார்.இந்த நிபுணர் குழு பல அமர்வுகளை நடத்தி, தங்கள் அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

மேலும்,ரம்புக்கனை பிரதேசத்தின்துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபர் சந்தன டி.விக்ரமரத்ன, மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர், மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர், கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கேகாலை மற்றும் ரம்புக்கனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

# பாராளுமன்ற விவாதம்

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கையின் அடிப்படையில் காரசாரமான விவாதம் எழுந்தது.

இச்சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்த அமைச்சர்,போராட்டக்காரர்கள் சுமார் 10 மணிநேரம் போராட்டம் நடத்தியதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது என்றார். போராட்டக்காரர்கள் முச்சக்கர வண்டிகளுக்கு தீ வைத்ததாகவும், 33,000 லீற்றர் எரிபொருளைக் கொண்ட பவுசருக்கு தீ வைக்க முற்படும் போது, பொலிஸார் தங்களின் அதிகாரத்திற்கு ஏற்ப அதனை கட்டுப்படுத்தியதாகவும் அவர் கூறினார். போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதை அடுத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றார். 2021ஆம் ஆண்டு சியரா லியோனில் ஏற்பட்ட தீ விபத்தில் 151 பேர் உடல் கருகி உயிரிழந்ததாகவும் அவர் கூறினார்.

அமைச்சரின் அறிக்கையை நிராகரித்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு.சஜித் பிரேமதாச, பொலிஸார் குறைந்தபட்ச பலத்தை பயன்படுத்தவில்லை என சுட்டிக்காட்டினார். எரிபொருள் பவுசர் விலை மாறும் வரை மணிக்கணக்கில் தடுத்துவைக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் பவுசர் முனையத்தில் இருந்து புறப்பட்ட நேரம் அடங்கிய தகவல் ஆவணத்தை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் திரு.காஞ்சன விஜசேகர சமர்பித்தார். WP LX 2735 என்ற இலக்கம் கொண்ட பவுசர் முத்துராஜவெல முனையத்தில் இருந்து ஏப்ரல் 19 ஆம் திகதி காலை 8.20 மணியளவில் புறப்பட்டு ரம்புக்கனை கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் மேலும் இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் எரிபொருளை ஏற்றிச் சென்றதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பவுசர் 11.20க்கு ரம்புக்கனை சென்றடைந்ததாகவும் அவர் கூறினார்.

உயிரிழந்த சமிந்த லக்ஷன் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்தித் சமரசிங்கவின் ஆதரவாளர் எனவும், அவர் தீவைப்பு போன்ற செயல்களில் ஈடுபடவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். இந்தப் போராட்டங்கள் யாராலும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரம்புக்கனை பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பெருந்தெருக்கள் அமைச்சர் கனக ஹேரத் தெரிவிக்கையில், இந்த போராட்டம் அதிகாலை 1.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. சில குழுக்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து 50 முதல் 100 வரையிலான முச்சக்கர வண்டிகளை கொண்டு வந்து எரிபொருள் நிரப்பு நிலையத்தைச் சுற்றியுள்ள வீதிகளை மறித்து பொலிஸாரை அங்கு செல்ல முடியாதவாறு செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். எனினும், காலை 11.30 மணிக்கும் கூட எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை என்றும், ஆனால் ஒரு குழு போராட்டத்தை திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டதாகவும், அந்தக் குழு தொடர்பில்அவர் அறிந்திருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கு ஆட்சேபனை தெரிவித்த கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம், முச்சக்கரவண்டிக்கு பொலிஸ ாரே தீ வைத்ததற்கு ஆதாரத்துடன் காணொளி உள்ளது என்று குறிப்பிட்டார்.

ரம்புக்கனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பஸ்நாயக்க, பவுசரை வேண்டுமென்றே தாமதப்படுத்தியதாகவும், பழைய விலைக்கு எண்ணெயை விற்க மறுத்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் பார்தி துஷ்மந்த ரம்புக்கனை குற்றம் சுமத்தியுள்ளார்.

## சட்ட நடவடிக்கைகள்

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி. கீர்த்திரத்ன மற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பில் 125 பொலிஸ் உத்தியோகத்தர்களிடமும் 113 பொதுமக்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

# தற்போதைய நிலைமை

ஏப்ரல் 19, 2022 அன்று ரம்புக்கணையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் அது தொடர்பான நிகழ்வுகள் அனைத்து அச்சு மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களிலும் தெரிவிக்கப்பட்ட போதிலும், எந்தவொரு ஊடகமும் தற்போதையவழக்கு விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள் தொடர்பான செய்திகளை பின்தொடர்வதில்லை. சிவில் சமூக அமைப்புகளும் அதை மறந்துவிட்டதாகத் தெரிகிறது. வாழ்வுரிமைக்கான மனித உரிமைகள் மையம் போன்ற குறைந்த எண்ணிக்கையிலான அமைப்புகள் மட்டுமே இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்கின்றன.

இது தொடர்பான விசாரணை அறிக்கைகள் எதுவும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

## இறந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்கள் தொடர்பாக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவத்தின் போது உயிரிழந்த அல்லது காயமடைந்தவர்களுக்கு அரசாங்கமோ அல்லது தொடர்புபட்ட நிறுவனங்களோ எந்தவித நிவாரணமோ அல்லது நட்டஈடோ வழங்கவில்லை. ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் கூற்றுப்படி அவர்கள் ஒரு தனியார் நன்கொடையாளரிடமிருந்து ஓரளவு நிவாரணம் பெற்றுள்ளனர்.

# முடிவுரை

ஏப்ரல் 19, 2022 அன்று ரம்புக்கணையில் நடந்த வன்முறையுடன் தொடர்புடைய பல அரசாங்க தரப்புக்கள் உள்ளன. நாட்டின் பொருளாதாரம் கடுமையாக சீர்குலைந்துள்ளதுடன், நாடு முழுவதும் எரிபொருள் வரிசைகள் அதிகரித்திருந்தன.

ரம்புக்கணை பகுதிக்கு பல நாட்களாக எரிபொருள் கிடைக்கவில்லை. இறுதியாக எரிபொருளை கிடைத்த போது, விலை பெருமளவு அதிகரிக்கப்பட்டிருந்தது.

ஒக்டேன் 92 பெற்றோல் ஒரு லிட்டர் ரூ.338 ஆகவும், ஒக்டேன் 95 பெட்ரோல் ஒரு லிட்டர் ரூ.373 ஆகவும், ஆட்டோ டீசல் ஒரு லிட்டர்ரூ.289 ஆகவும், சூப்பர் டீசல் ஒரு லிட்டர் ரூ.329 ஆகவும் உயர்த்தப்பட்டது. இந்த விலையேற்றத்தின் போது, ஒக்டேன் 92 பெற்றோல் ஒரு லீற்றர் 84 ரூபாவினாலும், ஒக்டேன் 95 பெற்றோல் ஒரு லீற்றர் 90 ரூபாவினாலும், ஆட்டோ டீசல் ஒரு லீற்றர் 113 ரூபாவினாலும், சுப்பர் டீசல் ஒரு லீற்றர் 75 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கத்துடன் தொடர்புடைய ரம்புக்கணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் முன்னதாகவே எரிபொருள் பவுசரை கொள்வனவு செய்து விலை அதிகரிக்கும் வரை மறைத்து வைத்துள்ளதாக மக்கள் மத்தியில் கருத்து பரவியிருந்தது. ஆனால், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின்படி, அது தவறான கருத்தாகும். எரிபொருள்நிலைய நிர்வாகம் குறைந்த விலையில் எரிபொருளை விற்க அனுமதிக்கப்படுவதில்லை.

ஆனால், இந்த உண்மைகளை புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் போராட்டக்காரர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை. பல நாட்களாக எரிபொருள் கிடைக்காத எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் கிடைத்தபோதும் அதனை புதிய விலையில் பெற்றுக் கொள்ள அவர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

ஆனால் அந் நேரத்தில், பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு, நீண்ட வரிசைகள் போன்றவற்றால் பொதுமக்களிடையே பரவிய அதிருப்தியால் எழும் இதுபோன்ற சூழ்நிலைகளை புத்திசாலித்தனமாக நிர்வகிக்கும் திறன் கொண்ட அமைப்புகளை நாடு கொண்டிருக்கவில்லை. சில சக்திகள்இந்த சூழ்நிலையை அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்தியமை இரகசியமல்ல.

எவ்வாறாயினும், ரம்புக்கணை சம்பவம் தொடர்பில் பொலிஸார் மீதான குற்றச்சாட்டுகள் பாரதூரமானவையாகும். ஆர்ப்பாட்டம் தொடர்பாக பொலிஸ் அதிகாரங்களை அமுல்படுத்துவதில் உள்ள சிக்கல்களுக்கு மேலதிகமாக, வன்முறை வெடிப்பதற்கு பொலிஸார் பங்களிப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடரும் சம்பவங்களின் பலம் காரணமாக ரம்புக்கணை சம்பவம் தொடர்பான விசாரணைகள் அற்பமானதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், இந்த விசாரணையின் கண்டறிவுகள், பொதுமக்களின் எதிர்ப்புகளை பொலிஸார் கையாளும் விதத்தில் தொழில்முறைக்கான பொறுப்புக்கூறலை மீண்டும் வலியுறுத்துவதில் முக்கியமானதாக இருக்கும். மேலும், குற்றமிழைத்த தரப்பினரைக் கண்டறிந்து அவர்களை சட்டத்தின்படி தண்டிப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் தப்பிப் பிழைத்தவர்களுக்கும் இழப்பீடு வழங்குவதும் மிகவும் முக்கியமானதாகும்.

சிவில் சமூகம் மற்றும் வெகுஜன ஊடகங்களின் பக்கத்திலிருந்து கவனிக்கக்கூடிய ஒரு கடுமையான பிரச்சினை உள்ளது. இதுபோன்ற பாரதூரமான சம்பவங்களைத் தொடர்ந்து கண்காணிக்கும் பொறுப்பில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதே அதுவாகும்.

# உசாத்துணைகள்

BBC - https://www.bbc.com/sinhala/sri-lanka-61176472, https://www.bbc.com/sinhala/sri-lanka-61176472, https://www.bbc.com/sinhala/sri-lanka-61176472
Interim report of the committee of experts appointed by the Human Rights Commission of Sri Lanka to investigate the police shooting incident that took place in Rambukkana on April 19
Ceylon News Factory new website (https://ceylonnewsfactory.com/%E0%B7%83%E0%B7%8A%E0%B7%80%E0%B7%8F%E0%B6%B0%E0%B7%93%E0%B6%B1-%E0%B6%9A%E0%B6%B8%E0%B7%92%E0%B6%A7%E0%B7%94%E0%B7%80%E0%B7%99%E0%B6%B1%E0%B7%8A-%E0%B6%85%E0%B6%B0%E0%B7%92%E0%B6%9A%E0%B6%BB%E0%B6%AB/)

Mawbima newspaper (https://mawbima.lk/2022/04/23/%E0%B6%BB%E0%B6%B9%E0%B7%94%E0%B6%9A%E0%B7%8A%E0%B6%9A%E0%B6%B1-%E0%B6%9D%E0%B7%8F%E0%B6%AD%E0%B6%B1%E0%B6%BA%E0%B7%9A-%E0%B6%BD%E0%B7%9A-%E0%B7%80%E0%B7%90%E0%B6%9A%E0%B7%92-%E0%B6%B-B%E0%B7%84/)

Silumina newspaper
https://www.silumina.lk/2022/05/07/%E0%B7%80%E0%B7%92%E0%B7%81%E0%B7%9A%E0%B7%82%E0%B7%8F%E0%B6%82%E0%B6%9C/%E0%B6%B4%E0%B7%9C%E0%B6%BD%E0%B7%92%E0%B7%83%E0%B7%8A-%E0%B7%80%E0%B7%99%E0%B6%A9%E0%B7%92-%E0%B6%B4%E0%B7%84%E0%B6%BB%E0%B7%99%E0%B6%B1%E0%B7%8A-%E0%B6%BB%E0%B6%B9%E0%B7%94%E0%B6%9A%E0%B7%8A%E0%B6%9A%E0%B6%B1%E0%B6%AF%E0%B7%93-%E0%B6%B8%E0%B7%92%E0%B6%BA%E0%B6%9C%E0%B7%92%E0%B6%BA-%E0%B6%A0%E0%B6%B8%E0%B7%92%E0%B6%B1%E0%B7%8A%E0%B6%AF%E0%B6%9C%E0%B7%9A-%E0%B6%B1%E0%B7%92%E0%B7%80%E0%B7%99%E0%B7%83%E0%B6%A7-%E2%80%98%E0%B7%83%E0%B7%92%E0%B7%85%E0%B7%94%E0%B6%B8%E0%B7%92%E0%B6%AB%E2%80%99-%E0%B6%9C%E0%B7%92%E0%B6%BA-%E0%B6%9C%E0%B6%B8%E0%B6%B1

Statement by Bar Association of Sri Lanka - https://basl.lk/statement-by-the-bar-association-of-sri-lanka-on-the-incident-at-¾mbukkana/
Human Rights Commission of Sri Lanka - https://www.hrcsl.lk/the-hrcsl-starts-an-independent-inquiry-on-the-police-shooting-incident-at-¾mbukkana-on-19th-april-2022-and-alleged-violations-of-the-rule-of-law-on-9th-and-10th-may-2022/

https://colombogazette.com/2022/04/22/human-rights-commission-records-statement-from-igp/
The Morning newspaper website
Video documentation of Right to Life Human Rights Organization – www.right2lifelanka.org
Aithiya news website – www.aithiya.lk
Basic Principles on the Use of Force and Firearms by Law - https://www.ohchr.org/en/instruments-mechanisms/instruments/basic-principles-use-force-and-firearms-law-enforcement
International Covenant of Civil and Political Rights
Constitution of Sri Lanka